பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 01 ஞாயிற்றுக்கிழமை 17.12.2023 கதிர் 401

# இமயமலைப் பிரடகனம் நிராகரிப்பு சர்வதேச நீதிமன்றமே வேண்டும்

## சிவில் அமைப்புகள், மாணவர்கள், மதத் தலைவர்கள் கூட்டாக இணைந்து ஒப்பமிட்டு அறிக்கை வெளியீடு

தமிழ் மக்களின் நிலைப்பாடுகளை கருத்தில் கொள்ளாத 'இமயமலை பிரகடனத்தை' நிராகரிக்கின்றோம், பதிலாக இலங்கையை சர்வதேச குற்றவியல்நீதிமன்றத்தில்வலியுறுத்துகின்றோம் என்று பல தமிழ் சமூகஅமைப்புகள்,மாணவர்கள், பாதிக்கப்பட்டதரப்பினர்மற்றும் மதத்தலைவர்கள் கூட்டாக அறிவித்துள்ளனர்.

திருகோணமலை தென்கயிலை ஆதீனம் தவத்திரு அகத்தியர் அடிகளார், மட்டக்களப்பு வண. பிதா. ஜோசப்மேரி, யாழ். சிவகுரு ஆதீனம் தவத்திரு வேலன் சுவாமிகள், யாழ். அமலமேரி தியாகிகள் சபை, வண. ☞ 2

## இது ரகசியம் அல்ல!

பொதுஜனபெரமுனவெள்ளிக்கிழமை சுகததாச உள்அரங்கில் நடத்திய பொதுக் கூட்டம் அந்தக் கட்சியைப் பொறுத்தவரை தனது பலத்தை மீண்டும் நிரூபிக்கும் விதத்திலான செயற்பாடு. கிராமப்புறங்களில் இருந்துபலஆயிரக்கணக்கானவர்கள் அழைத்து வரப்பட்டிந்தனர். அது மட்டுமல்லஅடுத்தஆண்டுத்தேர்தலை எதிர்கொள்ளத் தக்க வகையிலான காய்நகர்வுகளும்அந்தக்கூட்டத்தில் எடுக்கப்பட்டிருக்கின்றன.

பொது ஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர்பதவியைவெற்றிடமாக வைப்பதற்குஅக்கட்சியின்செயற்குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கட்சியின் நிறுவுநர் பஸில் ராஜபக்ஷவுக்கு எந்தவிதமான ☞ 2

## 2 ஆயிரம் குடும்பங்கள் கடும் மழையால் பாதிப்பு

பலத்த மழை வெள்ளத்தினால் நாட்டின் பல்வேறு பகுதிகளில் 2271 குடும்பங்களைச் சேர்ந்த 7,061பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

பேரிடர் முகாமைத்துவ நிலையம் வெளியிட்டுள்ள அறிவித்தலின்படி, வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உள்ளிட்ட பலபகுதிகளில்தொடர்ச்சியாக கடும் மழை பெய்து வருகின்றது இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. ☞ 2

## புலம்பெயர் அமைப்பும் எதிர்ப்பு

உலகத் தமிழர் பேரவை மற்றும் அதனுடன் இணைந்த சதிகாரர்களின் பௌத்த தேரர்கள் ஊடான முயற்சியை முழுமையாக நிராகரிப்பதாகவும், அதனை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ளக்கூடாது என்றும் 16 புலம்பெயர் அமைப்புக்களின் கூட்டான அனைத்துலக ஈழுத்தமிழர்மக்களவை அறிவித்துள்ளது.

அந்தஅமைப்புவிடுத்துள்ள ஊடக அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

2009ஆம் ஆண்டில், தமிழ் இனப்படுகொலையின் உச்சக்கட்டத்தில், உலகெங்கிலும்உள்ளதமிழ்அமைப்புகள், அனைத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில்உலகளாவிய தமிழ்புலம்பெயர்அமைப்பொன்றை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தன.

அதற்கமைவாக, தமிழ் மக்களின் நியாயமானமற்றும்அடிப்படை அபிலாஷைகளை முன்னேற்றுவதற்காக உலகத்தமிழர்பேரவை உருவாக்கப்பட்டது.

அவ்வமைப்பு உருவாக்கப்பட்டு ஒரு சில ஆண்டுகளுக்குள், உலகத்தமிழர் பேரவை ஒரு சில நபர்களால் ஜனநாயகமற்ற முறையில்நகர்த்தப்பட்டு, தமிழ் மக்களின் நியாயமான மற்றும்அடிப்படையான அபிலாஷைகளிலிருந்து விலகிச்சென்றது.

இதன் விளைவாக, கனடிய தமிழ் காங்கிரஸ் தவிர ஏனைய அனைத்தும் அமைப்புக்களும் உலகத்தமிழர் பேரவையிலிருந்துவெளியேறின. இதனையடுத்து உலகத்தமிழர் பேரவை புலம்பெயர் தமிழ் மக்களின் அடிப்படை ஆதரவின்றி இருந்தது.

இந்நிலையில் உலகத்தமிழர் பேரவையும், கனடிய தமிழ் காங்கிரஸும் இனப்படுகொலைக்காகவும், தமிழ் மக்களின் நியாயமான மற்றும் அடிப்படை அபிலாஷைகளுக்காகவும்செயற்பட மறுத்துவிட்டன.

பின்னர் உலகத் தமிழர் பேரவையிலிருந்து வெளியேறிய 16அமைப்புக்கள்அனைத்துலக ஈழத் தமிழர் மக்களவையைஉருவாக்கின, இது தமிழ் மக்களின் நியாயமான அபிலாஷைகளுக்காகதொடர்ந்து செயற்பட்டு வருகின்றது.

2011 ஆம் ஆண்டு முதல், அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவையானது உலகளாவியரீதி ☞ 8

## டெங்கு அறிகுறி இருந்தால் குருதிச் சோதனை அவசியம்

### யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர்



யாரேனும் ஒருவருக்கு காய்ச்சல் ஏற்பட்டு டெங்கு நோய் அறிகுறி ஏற்பட்டால் அருகில் உள்ள அரச வைத்தியசாலைகளில் குருதிப்பரிசோதனையை மேற்கொள்ளவேண்டும் என வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரும் யாழ்ப்பாணம் போதனாவைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் அதிகரித்துள்ளநிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் தினசரி நூற்றுக்கணக்கானோர் டெங்கு நோய்க்கான சிகிச்சையை பெற்று வருகின்றனர். இன்றும் நூற்றுக்கணக்கானோர் சிகிச்சைக்காக ☞ 8

## திருகோணமலையில் போராட்டம் மக்கள் போராட்ட இயக்க ஏற்பாட்டில்

நாட்டின் பெறுமதியான சொத்துக்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்வதைக் கண்டித்து திருகோணமலையில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மக்கள் போராட்ட இயக்கத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்னெடுக்கப்பட்ட போராட்டம் திருகோணமலை நகரத்தில் முன்னெடுக்கப்பட்டது. மக்களின் வாழ்நிலங்களிலிருந்து வெளியேற்றி முன்னெடுக்கப்படும் இந்தியப் பொருளாதார வேலைத்திட்டத்தினை தோற்கடிப்போம் என்ற தொனிப்பொருளில் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் நரேந்திர மோடி ஆகியோரின் புகைப்படங்கள் எரிக்கப்பட்டன. இந்தப் போராட்டத்தில் முன்னிலை சோசலிசக் கட்சியின் முக்கியஸ்தர் துமிந்த நாகமுவ, மக்கள் போராட்ட இயக்கத்தின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் வசந்த முதலிகே உள்ளிட்டவர்கள் ☞ 8

## இரு நாட்களுக்கும் மேல் காய்ச்சல் நீடித்தால் மருத்துவரை நாடுங்கள்

இரண்டுநாட்களுக்கு மேல் காய்ச்சல் நீடித்து தலையிடி, சத்தி, வயிற்றோட்டம், மூட்டு நோ போன்ற நோய் அறிகுறிகள் வந்தால் அருகில் உள்ள அரச வைத்தியசாலையை நாடுவது நல்லது என பொதுவைத்தியநிபுணர் ரி.பேரானந்தராஜா தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் அதிகரித்துள்ளநிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் செய்தியாளர்களைச் சந்தித்து அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பில்அவர் மேலும்தெரிவித்ததாவது: இரண்டு நாட்களுக்கு குறைவாக காய்ச்சல் இருக்குமானால் நன்றாக ஓய்வெடுத்து நீராகராத்தை குடித்தால் நன்று. ☞ 8

## நாட்டினது இறையாண்மையை காக்கும் பொறுப்பு படைக்குரியது

### அதில் எவருமே தலையிட முடியாது என்கிறார் ரணில்

நாட்டின்இறையாண்மையைப் பாதுகாக்கும் பெரும் பொறுப்பு பாதுகாப்புப் படையினருக்கு இருப்பதாகவும், அதில் தலையிடவோ அல்லதுகட்டுப்படுத்தவோ எவருக்கும் இடமளிக்க முடியாது எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவலியுறுத்தினார்.

மக்களின்இறைமையையும் இலங்கையின் தனித்துவத்தையும் பாதுகாக்கும் பொறுப்பு பாதுகாப்புத் தரப்பினருக்கும் உண்டு என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இன மற்றும் மத ரீதியாக எவரேனும் செயற்பட முற்பட்டால் அது இலங்கையின் தனித்துவத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் எனவும்வலியுறுத்தினார்.

தியத்தலாவ ☞ 2

## பெரமுன - ஐ.தே.க. கூட்டு மக்கள் ஆணைக்கு முரண்

### ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு


பொது ஜன பெரமுனவின் ஐக்கி தேசியக் கட்சியுடனான கூட்டுமக்கள்வழங்கியஆணைக்கு முரணானதாகும் என்று சுதந்திர மக்கள் காங்கிரஸின் உறுப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர்ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கண்டிக்கு நேற்று வந்திருந்த பேராசிரியர்ஜி.எல்.பீரிஸ் அஸ்கிரிய பீடத்தின் அனுநாயக்க தேரரைச் சந்தித்ததன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மஹிந்த ராஜபக்ஷவும், நானும் மேடையில் அமர்ந்திருந்து மக்களுக்கு தெளிவான திட்டமொன்றை முன்வைத்தோம். அந்தத் திட்டத்திற்கு மக்கள் ஆணைவழங்கினார்கள். ஆனால்தற்போது பொது ஜன பெரமுன ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டுவைத்துள்ளது. அது மக்கள் வழங்கிய ஆணைக்கு ☞ 8

## 5 வருடங்களுக்கு மேலாக வரிமான வரிப் பத்திரம் பெறாத வாகனங்களின் விவரம் திரட்டப்படுகிறது



5 வருடங்களுக்கு அதிகக்காலம் வருமான அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளாத வாகனங்கள் தொடர்பில் அனைத்து மாகாண சபைகளிடமிருந்தும் தகவல்களை கோரியுள்ளதாக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் நிஷாந்த வீரசிங்க தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும்தெரிவித்ததாவது:

வருமானஅனுமதிப் பத்திரத்தைகொண்டிராத வாகனங்கள்தொடர்பான தகவல்களை திரட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன

அந்த தரவுகளை அடிப்படையாகக் கொண்டு வாகன உரிமையாளர்களுக்கு அது தொடர்பில் அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

வருமானஅனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ளாத வாகனங்களின் பதிவுகளை தமது திணைக்களத்தின் ☞ 2

## இனி இது .....

பதவியும் வழங்கப்படவில்லை.

விஜயராமவில் உள்ள கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவின் இல்லத்தில் வெள்ளிக்கிழமை பொது ஜன பெரமுனவின் செயற்குழு கூட்டம் நடைபெற்றது.

இதன்போது, கட்சியின் அரசியல் சபை மற்றும் அதிகாரிகளின் சபை தெரிவு செய்யப்பட்டது. அதற்கு அமைவாக, கட்சியின் தவிசாளராக பேராசிரியர் உத்திராவல தம்மரட்ன தேரரும், கட்சியின் பொதுச்செயலாளராக சட்டத்தரணி சாகர காரியவசமும், பொருளாராக அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சியும் தெரிவு செய்யப்பட்டனர்.

கட்சியில் காணப்பட்ட பதவிகளில் அங்கத்துவம் செய்தவர்கள் அவ்வாறே மீண்டும் தெரிவாகியுள்ளனர். தேசிய அமைப்பாளர் பதவியை மட்டும் பஸில் ராஜபக்ஷவுக்கு வழங்காது வைத்துள்ளோம். பஸில் ராஜபக் ஷ அரசியல் குழுவில் அங்கத்தவராக உள்ளார். ஆனால் தேசிய அமைப்பாளர் பதவி வெற்றிடமாக்கப்பட்டுள்ளது என்றார்.

தேசிய அமைப்பாளர் பதவி தொடர்பில் கட்சியே இறுதி முடிவு எடுக்கும் என்று பொதுஜன பெரமுவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக் ஷ தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுவின் செயற்குழு கூட்டம் நேற்று நடைபெற்றதன் பின்னர் பஸில் ராஜபக் ஷவுக்கான தேசிய அமைப்பாளர் பதவி வெற்றிடமாக்கப்பட்டுள்ளது ஏன் என்று வினவியபோது கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது தேசிய அமைப்பாளர் பதவி வெற்றிடமாக்கப்பட்டுள்ளது. அது கட்சியின் செயற்குழு முடிவாகும். அதனால் அந்தப் பதவி எனக்கானது என்று தீர்மானிக்க முடியாத. கட்சியில் என்னைப்போன்று இளம் தலைவர்கள் பலர் உள்ளனர். ஆகவே அது பற்றி கட்சியின் அரசியல் குழுவே இறுதியான முடிவினை எடுக்கும். விரைவில் அந்த முடிவு அறிவிக்கப்படும் என்றார்.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## இமயமலைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிதா. ஜெயந்தன் பச்சாசெக், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கம் மட்டக்களப்பு ஒருங்கிணைப்பாளர் வண.பிதா.கந்தையா ஜெகதாஸ், வடக்கு கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தின் தலைவர் யோ. கனகரஞ்சினி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தலைவர் அ.விஜயகுமார், கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய கலை கலாசார பீட பிரதிநிதி -விக்னேஸ்வரன் கஜரூபன், யாழ்.கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் - சி.தங்கராஜா, வடக்கு கிழக்கு மாகாணங்கள பெண்கள் ஒருங்கிணைப்பு கண்காணிப்பு சங்கத்தின் தலைவர் விமலேஸ்வரி ஸ்ரீ காந்தரூபன், பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் தலைவர் சரோஜா சிவச்சந்திரன், உழைக்கும் மகளிர் அமைப்பு தலைவர் மிதிலைச்செல்வி ஸ்ரீ பத்மநாதன் ஆகியோர் கையொப்பமிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

சிறந்த இலங்கைக்கான சங்க மன்றம் மற்றும் உலகத் தமிழர் பேரவை ஆகியவற்றின் சமீபத்திய 'இமயமலை பிரகடனம்' பற்றி வடக்கு கிழக்கை தளமாகக் கொண்ட, கீழ் கையொப்பமிட்ட அமைப்புகளாகிய நாங்கள் கூட்டாக இந்த அறிக்கையை வெளியிடுகின்றோம் என்று தொடங்கும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இமயமலைப் பிரகடனத்தை நாம் கவனமாக வாசித்தோம். ஆனால் இந்தப் பிரகடனம் தமிழ் மக்களின் கருத்துக்களையோ இலங்கைத்தீவு சுதந்திரம் அடைந்த நாளிலிருந்து தமிழ் மக்கள் சிங்கள பேரினவாதத்தினால் அனுபவித்த துன்பங்கள், கொடுமைகளையோ கருத்தில் கொள்ளாமை தொடர்பில் நாம் எமது கடும் அதிருப்தியை வெளியிடுகின்றோம்.

வெளிப்படையாகவே பௌத்த மதகுருமார் தமிழ் மக்களின் துன்பங்கள் தொடர்பான தெளிவு அற்றவர்களாகவே உள்ளார்கள். ஏனெனில் அவர்கள் தமிழ் பகுதிகளுக்கு வெளியே சிங்களவர்களிடையே வாழ்கிறார்கள். மேலும் நாம் அனுபவித்த அனுபவித்துக் கொண்டிருக்கும் அடக்குமுறைகள் தொடர்பாக அவர்கள் எவ்வித கரிசனைகளையும் கொண்டிருக்கவில்லை.

பதினான்கு வருடங்களுக்கு முன்னர் போர் முடிவடைந்த பின்னர், 2021ஆம் ஆண்டு பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சியின் ஊடாக தமிழ் மக்களின் அபிலாஷைகளை வெளிப்படுத்தியுள்ளோம். இலங்கை இராணுவத்தின் மிரட்டல்கள், அச்சுறுத்தல்கள் மற்றும் கைதுகளுக்கு மத்தியிலும் ஏறக்குறைய சுமார் ஐந்து இலட்சம் தமிழர்கள் இணைந்து பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை ஐந்து நாள் மக்கள் பேரெழுச்சி மூலம் தமிழ் இனத்தின் நிலைப்பாட்டினை வெளிப்படுத்தி இருந்தனர். தமிழ்ப் பல்கலைக்கழக மாணவர்களும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் போன்ற பாதிக்கப்பட்ட அமைப்பினரும் பல போராட்டங்களையும் பேரணிகளையும் நடத்தி தமிழர்களின் நிலைப்பாட்டினை தொடர்ந்தும் வெளிப்படுத்தி வருகின்றனர். இவை எதுவும் இந்த 'பிரகடனத்தில்' கவனத்தில் கொள்ளப்படவில்லை. கடந்த பதினான்கு ஆண்டுகளாக தமிழர்களால் வெளிப்படுத்தப்பட்ட தமிழ் மக்களின் நிலைப்பாட்டினை அனைவரின் கவனத்திற்கும் மீண்டும் கொண்டுவர விரும்புகிறோம்.

1.போருக்கு முந்தைய 1983ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்த அளவிற்கு தமிழர் பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தை குறைத்தல். போர் முடிவடைந்து பதினான்கு ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. ஆனால் மே 2009இல் போரின் உச்சக்கட்டத்தில் இருந்ததைப்போலவே மோசமான அளவில் இராணுவ கட்டமைப்பு தமிழர் தாயகத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறது. தமிழ் இனப்படுகொலை மற்றும் தமிழ்ப் பெண்களை வன்புணர்தல் போன்ற பல கொடூரமான குற்றங்களை மேற்கொண்ட சிறிலங்கா ஆயுதப்படை தமிழர் நிலங்களில் தொடர்ந்து நிலைகொண்டிருப்பது, தமிழ் மக்களைத் தொடர்ந்தும் அச்ச சூழ்நிலையில் வைத்திருப்பதுடன் பல்வேறு சமூகப்பிரச்சினைகளையும் ஏற்படுத்துகின்றது.

2. ஐ.நா அதிகாரிகளின் முன்மொழிவுகளுக்கு அமைவாக இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்தவும். 2009இல் நடந்த போரின் இறுதி ஆறு மாதங்களில் ஏறக்குறைய எழுபதாயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டமை ஐ.நா. உள்ளக ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் கைக்குழந்தைகள் சிறுவர்கள் உட்பட ஆயிரக்கணக்கான தமிழர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். போர் முடிவடைந்து பதினான்கு ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் இவ்வினவழிப்பினையும் போர்குற்றங்களையும் நடாத்திய ஒரு பாதுகாப்புப் படை அதிகாரிகளோ அல்லது அரசியல் தலைவர்களோ நீதியை எதிர்கொள்ளவில்லை. மனித உரிமைகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகர் உட்பட பல ஐ.நா அதிகாரிகள் பரிந்துரைத்தது போல சிறிலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பரிந்துரைக்குமாறு நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

3.இலங்கை இராணுவம் உட்பட்ட அரசு நிறுவனங்களின் உதவியுடன் பல வரலாற்று சிறப்பு மிக்க சைவ ஆலயங்கள் அழிக்கப்பட்டு, சிங்களவர்கள் பூர்வீகமாக வசிக்காத தமிழர் தாயகமான வடக்கு கிழக்கு எங்கும் பௌத்த கோயில்கள் கட்டப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

4.தமிழர் தாயகத்தின் இனப்பரம்பலை மாற்றி அமைக்கும் முனைப்புடன் சிங்கள பௌத்த அரசதுணையுடன் தமிழர் தாயகம் எங்கும் இடம்பெறும் அத்துமீறிய சிங்கள குடியேற்றங்களும் காணி அபகரிப்புகளும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

5.மீண்டும் ஒரு இனவழிப்பும் குருதிச் சகதியும் இந்தத் தீவில் ஏற்படுவதைத் தடுக்க, இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வினை ஏற்படுத்தும் விதமாக தமிழ் மக்களிடையே சர்வதேசத்தினால் பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்: இலங்கை சுதந்திரம் பெற்றதில் இருந்து நீடித்து வரும் இனப்பிரச்சினைக்கு காரணம் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு வழங்கப்படாமையே ஆகும்.

இதன் விளைவாக 1958, 1977, 1983 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் தமிழர்கள் பெருமளவில் படுகொலை செய்யப்பட்டனர். தமிழ் தலைவர்களுக்கும் சிங்களப் பெரும்பான்மை அரசுகளுக்கும் இடையிலான பல உடன்படிக்கைகள் தொடர்ந்து வந்த அரசுகளால் கிழித்தெறியப்பட்டன. இந்தியா மற்றும் நோர்வே மேற்கொண்ட சர்வதேச மத்தியஸ்தங்களும் கூட தோல்வியடைந்தன.

உலகெங்கிலும் உள்ள பல நாடுகளில் குறிப்பாக பனிப்போர் முடிவடைந்த கடந்த முப்பது ஆண்டுகளாக ஜனநாயக ரீதியில் அரசியல் தீர்வுகளை காண பொதுவாக்கெடுப்பு முறையே நடைமுறையில் உள்ளது. இந்த சர்வதேச நடைமுறையையே தமிழர்களாகிய நாமும் தொடர்ந்து கோரி வருகின்றோம் என்றுள்ளது.

## 2 ஆயிரம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களை சேர்ந்தவர்களே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக முல்லைத்தீவில் 33 வீடுகள் அனர்த்தத்தில் சேதமடைந்துள்ளன. 212 குடும்பங்களை சேர்ந்த 700 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவில் வவுனிக்குளம் பெருக்கெடுத்தமையினால் மாந்தை கிழக்கு பகுதியின் தரைவழி போக்குவரத்து முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது.

செல்வபுரத்திலிருந்து சிவபுரத்திற்கு செல்லும் பிரதான வீதியிலும் துணுக்காயில் இருந்து நட்டாங்கண்டலுக்கு செல்லும் பிரதான வீதியிலும் வெள்ளம் நிறைந்துள்ளது.

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பண்டாரவன்னி, புளியங்குளம் பகுதிகளிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் சுமார் 150 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதோடு, உறவினர் வீடுகளில் தங்கவைக் கப்பட்டுள்ளனர்.

இதனிடையே, சந்தவெளி - திகிலிவெட்டை இறங்குதுறை படகுப்பாதை நீரில் அடித்துச் செல்லப்பட்டதால், மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டது.

நேற்றுக்காலை 06 மணியளவில் திகிலிவெட்டை - சந்திவெளி படகுப்பாதை, இயந்திர கோளாறு காரணமாக பயணிகளுடன் அடித்துச்செல்லப்பட்டுள்ளது. இதன் காரணமாக குறித்த படகுப்பாதை திருத்தபடும் வரை சுமார் 4 மணித்தியாலம் வரை பொதுமக்கள் காத்திருக்க வேண்டியேற்பட்டது.

கிரான் சந்தியிலிருந்து குடும்பிமலைக்கு செல்லும் பிரதான வீதியின் போக்குவரத்து கடந்த சில தினங்களாக பாதிக்கப்பட்டிருந்த நிலையில், நேற்றிரவு பெய்த பலத்த மழையினால் வீதியினூடான போக்குவரத்து முற்றாக தடைப்பட்டுள்ளது.

இதேவேளை, சந்தனமடு ஆறும் பெருக்கெடுத்துள்ளதால், சித்தாண்டி 2, 3, 4 கிராம சேவகர் பிரிவுகளின் கரையோரங்களிலுள்ள வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. தாழ்நிலப் பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக சில பகுதிகளில் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். அவர்களை பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பெய்த பலத்த மழை காரணமாக, ஏற்பட்ட வெள்ளப்பெருக்கை அடுத்து, 82 குடும்பங்களை சேர்ந்த 270 பேர் இடப்பெயர்ந்துள்ளனர். இவர்கள் இரண்டு முகாம்களில் தங்கியுள்ளனர். பாலியாறு பெருக்கெடுத்ததால், தேவன்பிட்டி கிராமத்தை சேர்ந்தவர்களே பாதிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடரும் மழை காரணமாக இரணைமடு ஐயன்கோவிலடி பகுதியை சேர்ந்த 23 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இடம்பெயர்ந்துள்ளனர். பலத்த மழையையடுத்து, இரணைமடு குளத்தின் 14 வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ள நிலையில், தாழ்நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

இதனையடுத்து, ஐயன்கோவிலடியை சேர்ந்த 23 குடும்பங்களின் 70 பேர் இடம்பெயர்ந்து, பாடசாலையொன்றில் தங்கவைக்கப் பட்டுள்ளனர். கண்டி - பன்வில, ஆகல தோட்டத்தில் ஏற்பட்ட மண்சரிவில் வீடொன்று முழுமையாக சேதமடைந்துள்ளது. பாதிக்கப்பட்டவர்கள் உறவினர்களின் வீடுகளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வளிமண்டலவியல் திணைக்களம், விடுத்துள்ள அறிவிப்பில், இலங்கையை அண்மித்த வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள தளம்பல் நிலை காரணமாக வடக்கு, கிழக்கு, வடமத்திய, ஊவா, ஆகிய மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலும் மழை தொடரும் வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களின் சில பகுதிகளில் 100 மில்லிமீற்றருக்கும் மேற்பட்ட மழைவீழ்ச்சி பதிவாகும்.

ஏனைய பகுதிகளிலும் 75 மில்லிமீற்றர் வரை மழை பெய்வதற்கான சாத்தியம் உள்ளதோடு மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் காற்றின் வேகம் அதிகரிக்கலாம் என்பதால், விழிப்புடன் செயற்பட வேண்டும் என்றுள்ளது.

## நாட்டினது ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை இராணுவ கல்வியற் கல்லூரியின் கெடட் அதிகாரிகள் விடுகை அணிவகுப்பு நிகழ்வில் நேற்று முற்பகல் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப் பிட்டார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றியதாவது:

தியத்தலாவ இராணுவ கல்வியற் கல்லூரி சர்வதேச புகழ் பெற்ற ஒரு நிறுவனமாகும். அத்தகைய புகழ்பெற்ற நிறுவனத்தில் உங்கள் பயிற்சியை முடித்திருக்கிறீர்கள். நீங்கள் அனைவரும் இன்று முதல் இலங்கை இராணுவத்தில் இணைகிறீர்கள்.

இலங்கை ஒரு இறையாண்மை கொண்ட நாடு. நாங்கள் 1948 முதல் இறையாண்மை கொண்ட நாடாகச் செயற்பட்டு வருகிறோம். அந்த இறையாண்மை கொண்ட நாட்டின் அதிகாரம் மக்களுக்குரியது. அரசுகள் மக்களின் வாக்குகள் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

மேலும் இந்த நாடு இலங்கை தனித்துவத்தின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. நாம் அனைவரும் இலங்கையர்கள். இலங்கையர்களாகிய நாம் சிங்கள, தமிழ், முஸ்லிம் என்ற எமது தேசியத்தை பாதுகாப்பதுடன் இலங்கையர் என்ற நாட்டின் தனித்துவத்தையும் பாதுகாக்க வேண்டும்.

மேலும், நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்க வேண்டும். ஒரு நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடையும் போது என்ன நடக்கும் என்பதை கடந்த காலங்களில் நாம் அனுபவித்தோம். அப்போது நாட்டின் இறையாண்மை மட்டுப்படுத்தப்படும். நாட்டு மக்களை சமமாக நடத்தும் வகையில் சமூக முன்னேற்றமும் ஏற்பட வேண்டும்.

பொருளாதார முன்னேற்றமும் சமூக முன்னேற்றமும் இதன்போது மிக முக்கியம். இந்தக் கட்டமைப்பிற்குள் நாம் செயல்பட வேண்டும். ஒவ்வொரு குழுவுக்கும் இந்தக் கட்டமைப்பைப் பாதுகாக்கும் பொறுப்பு உள்ளது. அந்தப் பொறுப்பு ஜனாதிபதி முதல் கீழ்நோக்கிச் செல்கிறது.

நாட்டின் இறையாண்மையை பாதுகாக்கும் பெரும் பொறுப்பு இராணுவத்துக்கு உள்ளது. அதில் தலையிடவோ அல்லது கட்டுப்படுத்தவோ எவருக்கும் இடமளிக்க முடியாது. அதேசமயம் அதிகாரம்சார் மக்களின் உரிமையும் பாதுகாக்கப்பட வேண்டும்.

அத்துடன் இலங்கையின் தனித்துவமும் பாதுகாக்கப்பட வேண்டும். அந்த தனித்துவத்தை பாதிக்கும் வகையில் எவரேனும் செயற்பட முற்பட்டால் அல்லது இன மற்றும் மத அடிப்படையில் தனித்தனியாக செயல்பட முயற்சித்தால் அது இலங்கையின் தனித்துவத்திற்கு கேடுவிளைவிக்கும் செயற்பாடாகும்.

இலங்கை இராணுவம் ஒரு புகழ்பெற்ற வரலாற்றைக் கொண்டுள்ளது. ஆசியாவில் நவீன இராணுவங்கள் ஆரம்பிக்கப்பட்ட நேரத்தில், இலங்கை நான்காவது இடத்தில் இருந்தது.

1881இல், இலங்கை காலாட்படை ஆரம்பிக்கப்பட்டபோது, நாங்கள் அந்த நிலையை அடைந்தோம். மேலும், வரலாற்றில் இடம்பெற்ற ஒவ்வொரு பெரும் போர்களிலும் நமது பாதுகாப்புப் படைகள் பங்கேற்றுள்ளன.

இந்த பெருமைமிக்க இராணுவத்தின் கௌரவத்தை பாதுகாப்பது உங்களின் பொறுப்பாகும். நீங்கள் தலைமை தாங்க தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளீர்கள். அச்சமின்றி அந்தத் தலைமையை உங்களுக்கு கீழ் உள்ள அனைவருக்கும் வழங்குங்கள். உங்கள் பொறுப்புகளை புறக்கணிக்காதீர்கள்.

குறிப்பாக கடினமான காலங்களில்தான், தலைமைத்துவம் முன்னோக்கிச் செல்ல வேண்டும். அந்தக் கடமையை நினைவில் வைத்து நாட்டுக்கான பொறுப்பை நிறைவேற்றுமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

## 5 வருடங்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரவுக் கட்டமைப்பிலிருந்து நீக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப் படவுள்ளது என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கை இராணுவத்துக்கு தலைமை அதிகாரி நியமனம்

கஜபாகு படைப்பிரிவைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் டபிள்யூ. எச்.கே.எஸ். பீரிஸ் இலங்கை இராணுவத்தின் புதிய தலைமை அதிகாரியாகநியமிக்கப்பட்டுள்ளார்.

இப்பதவியைபொறுப்பேற்கும் முன், மேற்கு பாதுகாப்பு படை கட்டளைத்தளபதியாக அவர் தனது கடமைகளை ஆற்றியிருந்தார்.

அவர், பாணந்துறை புனித அந்தோனியார் ஆண்கள் பாடசாலை மற்றும் கொழும்பு தர்ஸ்டன் கல்லூரி ஆகியவற்றில் தனது பாடசாலைக் கல்வியை பெற்று 1988 ஆம் ஆண்டு இராணுவத்தில் இணைந்து கொண்டார்.



அவரதுஇராணுவசேவையின் போது படிப்படியாக பதவி உயர்வு பெற்று, 2021 ஆண்டு மே மாதம் 07 ஆம் திகதி மேஜர் ஜெனரலாக பதவி உயர்வு பெற்றமை குறிப்பிடத்தக்கது.

யுத்த நடவடிக்கைகளில் துணிச்சலுடன்செயல்பட்டதற்காக 'ரண விக்கிரம பதக்கம்' மற்றும் 'ரண சூர பதக்கம்' ஆகிய விருதுகளைப் பெற்றார், மேலும் அவரது தவறற்ற சேவைக்காக 'விசிஷ்ட சேவா பதக்கம்' என்ற விருதும் பெற்றார்.

மேஜர் ஜெனரல் பீரிஸ் ரண விக்கிரமபதக்கம், ரணசூரபதக்கம் மற்றும் விசிஷ்ட சேவா பதக்கம் ஆகிய விருதுகளை பெற்றுள்ளவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், மேஜர்ஜெனரல்பீரிஸ், இராணுவ புலனாய்வுப் பிரிவின் கர்னல் தளபதி பதவியையும் வகித்து வருகிறார் .(05)



## நானு ஓயாவில் சொகுசுக் கார் விபத்து: மயிரிழையில் பிழைத்த கணவன், மனைவி

நானுஓயா ரதல்ல குறுக்கு வீதியில் பயணித்த சொகுசு கார் ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டையிழந்தது பாதுகாப்பு வேலியில் மோதி சனிக்கிழமை காலை விபத்துக்குள்ளானது.

இந்நிலையில், சொகுசு காரில் பயணித்தவர்கள் கணவன், மனைவி எனவும் இருவரும் மயிரிழையில்எந்தவிதகாயங்களுமின்றி உயிர்தப்பியுள்ளனர்.

நுவரெலியாவில்இருந்துகொழும்பு நோக்கி நானுஓயா ரதல்ல வீதியில் சென்ற சொகுசு கார் அதே வழியில் சென்ற வாகனம் ஒன்றில் ஓயில் சிந்திகாணப்பட்டமையினாலும் சீரற்ற காலநிலை காரணமாகவும் மிகவும் செங்குத்தான இவ்வீதில் ஓயில் வழுக்கியமையால் குறித்த சொகுசு கார் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியின் இடது பக்கமாக இழுத்துச் செல்லப்பட்டு பாதுகாப்பு வேலியில் மோதி விபத்துள்குள்ளானது.

சம்பவ இடத்திற்கு விரைந்த நானுஓயா போக்குவரத்து பொலி-ஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (05)

## பொலிஸார் இனவாதத்தை தூண்ட முயற்சிக்கின்றனர்! கஜேந்திரகுமார் குற்றச்சாட்டு



இனவாதத்தைத் தூண்டிவிட்டுத் தமிழர்களின் உரிமையை மறுப்பதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் முன்னெடுத்துவருவதை வெள்ளிக்கிழமை சம்பவம் நிரூபித்துள்ளதாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

மயிலத்தமடுவிற்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் உட்பட பலர் சென்ற நிலையில் பொலிஸாரால் உட்செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டது.

இதன்போது அம்பிட்டிய சுமனரத்ன தேரரின் தலைமையிலான குழுவினர் வருகைதந்து விளைவித்த குழப்பத்தைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கிருந்து திரும்பிச்சென்றனர்.

இந்தநிலையில்ஜனாதிபதிசெயலாளரின் அறிவுறுத்தலையும் மீறிய வகையில் பொலி-ஸாரின் செயற்பாடுகள் காணப்பட்டன எனவும் இதன்போது கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார். (05)

## வவுனியாத் தமிழ்ச் சங்கம் தொடர்பாக தகவல் அறியும் சட்டம் மூலம் தாக்கல்!

வவுனியாவில் இயங்கி வரும் தமிழ் சங்கம் தொடர்பாக வவுனியா பிரதேச செயலகத்தில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல் கேட்கப்பட்டு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமை வவுனியா பிரதேசசெயலகத்தில் குறித்த விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக வவுனியா தமிழ்ச்சங்கம் தொடர்பாகப் பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையிலேயே குறித்த தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த விண்ணப்பத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு, பதிவு செய்யப்பட்ட ஆண்டு, பதிவிலக்கம், நிர்வாக உறுப்பினர்களின் பெயர் விவரம், ஆரம்பிக்கப்பட்ட ஆண்டில்இருந்துபொதுக்கூட்டங்கள் இடம்பெற்றனவா, அதன்பிரதிகள், கணக்கறிக்கைகள் என பல்வேறு கேள்விகளை உள்ளடக்கி குறித்த விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

## டிஜிற்றல் அடையாள அட்டை ஜனவரி முதல் நடைமுறைக்கு!

வரும் ஜனவரி முதல் டிஜிற்றல் அடையாள அட்டைவழங்கப்படும்எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

நான்கு பில்லியன் ரூபா இந்திய மானியமாக வழங்கப்படும் இந்த அடையாள அட்டையில், கண்ணின் நிறம், கைரேகைகள் மற்றும் இரத்த வகை போன்ற நபரின் உயிர்த் தகவல்களின் தரவுகளும் அடங்கும்.

முன்னதாக, டிஜிற்றல் அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் போது 76 சுயவிவரம் கோரப்பட்ட நிலையில், புதிய டிஜிற்றல் அடையாள அட்டையை பெற சுயவிவரம் மட்டுமே தேவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, புதிய டிஜிற்றல் அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் போது, பெயர், முகவரி, பிறந்த திகதி, பாலினம், தொலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி ஆகியவற்றை கட்டாயம் அளிக்க வேண்டும்.

புதிதாக அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு இந்த புதிய டிஜிற்றல் அடையாள அட்டையை வழங்கி அதன் பிறகு படிப்படியாக ஒட்டுமொத்த சமூகத்திற்கும் டிஜிற்றல் அடையாள அட்டையை வழங்குவதே அரசின் நோக்கமாகும். (05)

## 5 ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையை அடுத்த ஆண்டுமுதல் இலகுபடுத்த திட்டம்

பிள்ளைகள் மற்றும் பெற்றோர்களின் அழுத்தத்தை குறைக்கும் வகையில் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை அடுத்த வருடம் இலகுபடுத்தப்படும் என கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

புலமைப்பரிசில் பரீட்சையில் எழுத்தறிவுமற்றும்எண்ணிக்கையை அளவிடுவதற்கு முன்னுரிமை வழங்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

எதிர்காலத்தில் புலமைப்பரிசில் சித்திகளைப் போன்று 4ஆம் மற்றும் 5ஆம் தர வகுப்பறையில் முப்பது வீதமான புள்ளிகளைப் பெற வேண்டும் எனவும், அதற்காக பிள்ளைகள் தொடர்ச்சியாக பாடசாலைக்குச் செல்வது அவசியம் எனவும் பிரேமஜயந்த குறிப்பிட்டார்.

புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பில் பல முன்மொழிவுகள் கிடைக்கப்பெற்றுள்ளன எனவும் அந்த முன்மொழிவுகள் ஆராயப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

புலமைப்பரிசில் பரீட்சை சிக்கலானது. பிள்ளைகளின் மனதில் பெரும் சுமையாக இருப்பதாக கல்வியியாளர்களும் மனநல நிபுணர்களும் நீண்டகாலமாக அரசாங்கத்திடம் சுட்டிக்காட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

## ஊர்காவற்துறை ஆலயத்தில் திருடிய குற்றத்தில் கைதான பூசகருக்கு மறியல்!

யாழ்ப்பாணத்தில் ஆலய விக்கிரங்களின் கீழிருந்த யந்திரத் தகடுகள்மற்றும்பொற்காசுஎன்பவற்றை திருடிய குற்றத்தில் கைது செய்யப்பட்ட ஆலய பூசகரை எதிர்வரும் 28ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

ஊர்காவற்துறை சுருவில் ஐயனார் கோவில் பூசகர் ஆலய மூல விக்கிரகமான ஐயனார் மற்றும் பரிவார மூர்த்தி விக்கிரகங்களின் கீழிருந்த யந்திர தகடுகள் மற்றும் பொற்காசுகள் என்பவற்றைத் திருடிய குற்றத்தில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

கைது செய்யப்பட்ட நபர், சுமார் 17 லட்சம் ரூபா பெறுமதியான 10 பவுண் யந்திர தகடுகள் மற்றும், ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பொற்காசுகள் என்பவற்றை திருடிய குற்றச்சாட்டின் கீழ் ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றில் பதில் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்ட போது பூசகரை எதிர்வரும் 28 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க பதில் நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (05)

## காணாமற்போன இளைஞன் ஒருவரின் சடலம் மீட்பு!

காணாமல்போன இளைஞன் ஒருவரது சடலம் தோட்ட கிணற்றில் மீட்கப்பட்டது.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, கோப்பாய் மத்தி பகுதியில் உள்ள தோட்டக் கிணறு ஒன்றில் இருந்து 29 வயதுடைய நிரோசன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞன் கடந்த 13 ஆம் திகதி 4 மணியளவில் வீட்டில் இருந்து புறப்பட்டு சென்ற நிலையில் காணாமல் போயுள்ளார்.

இந்நிலையில் குறித்த இளைஞனை உறவினர்கள் தேடி வந்த நிலையில் தோட்டக் கிணற்றில் இருந்து அவரது சடலம் மீட்கப்பட்டது.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளைதிடீர்மரணவிசாரணைஅதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

அதேவேளை சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளையும் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (05)

## இராணுவத்திலிருந்து தப்பிய இருவர் உள்ளிட்ட நால்வர் 2 கோடி ரூபா பெறுமதியான கஜமுத்துக்களுடன் கைது!





இரண்டு கோடி ரூபா பெறுமதியான கஜ முத்துக்களை விற்பனை செய்ய முயன்ற நான்கு சந்தேக நபர்கள் சீதுவை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த சம்பவம் வியாழக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

கைதுசெய்யப்பட்டவர்கள் இமதுவை , வெலிஓயா, பளுகஸ்வெள மற்றும் பன்னிப்பிட்டிய ஆகிய பிரதேசங்களை சேர்ந்தவர்கள் ஆவர்.

இவர்களில் இருவர் இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர்கள் என விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், வர்த்தகர்களாக வேடம் கொண்ட பொலிஸாரால் சந்தேக நபர்கள் சீதுவை பகுதிக்கு அழைத்துவரப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர். சோதனையில் இரண்டு கோடி ரூபா பெறுமதியான 4 கஜ முத்துக்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்டவர்கள் வெள்ளிக்கிழமை நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சீதுவை பொலி-ஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## டெங்கிலிருந்து பாதுகாப்பு தேடுவோம்

இரண்டு நாட்களுக்கு மேட்பட்ட காய்ச்சல் மற்றும் சில அறிகுறிகள் தென்பட்டால் தாமதமின்றி வைத்தியசாலைகளை நாடி சிகிச்சை பெற்றுக்கொள்ளும்படி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மற்று மருத்துவ நிபுணர்கள் நேற்று எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கையில் டெங்கு நோய் தாக்கம் மிக மோசமாகத்தீவிரமடைந்துள்ளது. தொற்றுநோயியல் தகவல்களின்படி மார்கழி 10ஆம் திகதி வரையில் மட்டும் 80 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். மேல் மாகாணமே நோயின் மிகத் தீவிர தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளது எனினும் ஏனைய பகுதிகளும் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட 80,222 பேரில் 37,216 பேர் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள். மார்கழி மாதத்தில் மட்டும் இங்கு 3,734 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட மாவட்டமாக கொழும்பு அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இங்கு இந்த வருடத்தில் மட்டும் இதுவரையில் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அதேபோன்று இந்த வருடத்தில் இதுவரையில் 47 டெங்கு நோய்த் தாக்கத்தின் காரணமாக உயிரிழந்துள்ளனர்.

காவி நோய்களுள் இலங்கையில் டெங்கு நோய் முக்கிய இடத்தினை வகிக்கிறது. முதல் தடவையாக ஆய்வுகூடப் பரிசோதனை மூலம் டெங்கு நோயென உறுதிப்படுத்தப்பட்ட ஒரு நோயாளி 1962ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டார். அது முதல் இந்த நோயின் தாக்கம் இலங்கையிலிருந்து அகலவில்லை. சில பல சமயங்களில் இது கொள்ளை நோய் என்கிற அளவிற்கான பாதிப்புக்களையும் ஏற்படுத்தியுள்ளது. டெங்கு கொள்ளை நோய் நிலைமை1965 1966 ஆம் ஆண்டுகளில் பதிவாகியதுடன் டெங்கு குருதிப்பெருக்கு நோயாளர்கள் சிலர் அப்போது இனங்காணப்பட்டனர்.

இந்த வருட தொடக்கம் முதலே டெங்கு நோயின் தாக்கம்தீவிரமாகஇருப்பதாகமருத்துவத்துறையினர் தொடர்ந்து எச்சரிக்கை செய்து வந்திருந்தார்கள். மழை காலத்தில் நிலமை இன்னும் தீவிரமடையும் என்றும் அவர்கள் மீண்டும் மீண்டும் கூறிவந்தார்கள். அதுபோன்றேநிலமைதற்போதுதீவிரமடைந்துள்ளது.

அரசு, சுகாதாரத்துறை, உள்ளூராட்சிசபையினரின் நடவடிக்கைகளால் மட்டும் டெங்குத் தாக்கத்தைக் கட்டுப்படுத்த முடியும் என்கிற நிலை கடந்தாகிவிட்டது. நாட்டிலுள்ள ஒவ்வொரு குடிமகனும் தன்னிலை உணர்ந்து அர்ப்பணிப்போடு செயற்படும்போது மட்டுமே நிலமையைக் கட்டுப்படுத்தி உயிரிழப்புக்களைத் தடுக்க, தவிர்க்க முடியும். முக்கியமாக வீடுகள் வளவுகளில்தண்ணீர்தேங்கிநிற்கக்கூடியபகுதிகளை அடையாளம் கண்டு அவற்றை அகற்றிவிடுவது, சுற்றுப்புறச்சூழலைத்துப்புரவாகவைத்திருப்பதுஎன்று ஒவ்வொருவரும் தமது முழுமையான பங்களிப்பை வழங்குவதன் மூலமே இந்தப் பேரிடரிலிருந்த காத்துக்கொள்ள முடியும்.

டெங்குவில்இருந்துஎம்மைபாதுகாத்துக்கொள்ள முதலில் நுளம்புகள் பரவக்கூடிய பகுதிகளை தூய்மைப்படுத்துவது மிகவும் அவசியமாகும். தூய்மையான நீர் சேரும் பகுதிகளிலேயே டெங்கு நுளம்புகள் தங்கியிருக்கும். அதனாலேயே மழைக் காலம் அதன் பரவுகைக்கு ஊக்கம் தருவதாக அமைகின்றது. பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்ட தேங்காய் சிரட்டைகள், பிளாஸ்டிக் பொருட்கள், டயர், பூச்சாடிகள் உள்ளிட்ட பொருட்கள் இருக்கும் இடங்களில் நீர் தேங்கியிருக்கும்போது டெங்கு கொசுக்களின் உருவாக்கம் அதிகரிக்கின்றன. இதனால் நோய்த் தாக்கமும் அதிகரிக்கிறது. முடிந்தளவுக்கு இப்பகுதிகள் தொடர்பில் அவதானம் செலுத்தி, அவற்றை தூய்மைப்படுத்த வேண்டியது அவசியமாகும். வளவுகளையும் துப்புரவாக்கி தூய்மைப்படுத்திஎம்மைநாமேகாத்துக்கொள்வோம்.



# தமிழர் பிரதேசத்தில்
## விளையாட்டில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது உடற்கல்வி டிப்ளோமா கற்கைநெறி!

பழனித்துரை தர்மகுமாரன்,
தலைவர் – உடற்கல்வி
டிப்ளோமா ஆசிரியர் சங்கம்




தமிழர் பிரதேசத்தில் விளையாட்டுச்செயற்பாடும் அதன் திறன் சார்ந்த ஆற்றலும் பொலிவிழந்து கொண்டிருக்கையில் உதயமானதே உடற்கல்வி டிப்ளோமா கற்கைநெறி. இக் கற்கைநெறியானது ஆரம்பித்து 25 வருடங்களை பூர்த்தி செய்யும் நிலையில் நித்திலம் போற்ற நினைவுபடுத்தப் படுகின்றது.

1998 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 12 ஆம் திகதி இலங்கையிலே முதன் முதலாக யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் வாழ் நாள் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை அவர்களால் உடற்கல்வி டிப்ளோமாக் கற்கைநெறி ஆரம்பித்து வைக்கப்பட்டது. இரண்டு வருடங்களைக் கொண்ட உடற்கல்வி டிப்ளோமாக் கற்கைநெறியின் முதல் இணைப்பாளராக திருமதி தேவரஞ்சினி சுபாஸ்கரன் கடமைப் பொறுப்பை ஏற்று கற்கைநெறியின் வளர்ச்சியிலும் எழுச்சியிலும் முயற்சியுடன் தடம் பதிக்கச் செய்தார்.

உடற்கல்வி டிப்ளோமாக் கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்ட போது பல்வேறு விமர்சனங்கள் பல வழிகளிலும் முன்வைக்கப்பட்டு நசுக்குவதற்கும், சிதைப்பதற்கும் சிலர் முயன்றபோதும், பலரது விமர்சனங்களே இக் கற்கைநெறியை நிமிர்ந்து நிலையாக நிற்பதற்கு உதவியது. குந்தியின் வயிற்றில் பிறந்த கர்ணன் எவ்வாறு அரச குலத்தை இளந்தானோ அவ்வாறே யாழ்.பல்கலைக்கழகத்தில் உடற்கல்வி டிப்ளோமாக் கற்கைநெறிக்கு சென்ற மாணவர்கள் உள்ளேயும் வெளியேயும் விமர்சனத்திற்கு உள்ளாக்கப்பட்டனர்.

கர்ணணின் திறமை பிறப்பிலே ஒளிய வளர்ப்பில் அல்ல. என்பதை உணர்த்தியதுபோல உடற்கல்வி டிப்ளோமாக் கற்கைநெறி மாணவர்களின் திறன்களின் மூலம் கற்கைநெறி காலைக் கதிரவன் போல் சுடர் விட்டு பிரகாசிக்கத் தொடங்கியது. 2000 ஆம் ஆண்டு முதல் அணி மாணவர்களின் வெளியேற்றம் வேலைவாய்ப்பில் சதிராட்டம். தேவை இருந்தும் புறக்கணிப்பு, புரிதல் அற்ற செயற்பாடு வினைகள் வீரியமாக இருந்தால் விளை நிலத்தாள் முளைப்பதை தடுத்துவிட முடியாது. அதேபோல முதல் அணி மாணவர்களின் போராட்டம், நிறைந்த அர்ப்பணிப்பும் பின்னர் தொடர்ச்சியாக இணைந்துகொண்ட டிப்ளேமா தாரிகளின் எண்ணிக்கையும் வேலை வாய்ப்பிற்கு அடித்தளம் இட்டது. 2005 ஆம் ஆண்டு முதன் முறையாக உடற் கல்வி ஆசி ரிய நியமனம் உடற்கல்வி டிப் ளோமா தாரிகளுக்கு வடக்கு, கிழக்குத் தழுவி போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் 50 இற்கு குறையாத உடற்கல்வி ஆசிரியர்கள் பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டனர்.

இந்த நியமத்தின் மூலம் தமிழர் பிரதேசத்தில் விளையாட்டு மறுமலர்ச்சி அடைய வித்திடப்பட தொடர்ந்து சீரான இடைவெளியில் டிப்ளோமா ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டது. இதன் மூலம் பாடசாலை மாணவர்களின் விளையாட்டுத் திறன் வளர்ச்சி மேலோங்கத் தொடங்கியது. மழையைக்கண்ட புற்தரைகள் பச்சைப் பசேலாகக் காணப்படுவது போல உடற்கல்வி டிப்ளேமா ஆசிரிய நியமனத்தின் மூலம்கிராமப்புறபாடசாலைகளில் விளையாட்டு எழுச்சிகொள்ளத் தொடங்கியது.

தனியார் பாடசாலைகள், தேசிய பாடசாலைகள், 1 ஏபி பாடசாலைகளுக்கு நிகராகவும், சவால் விடும் வகையிலும் கிராமப்புறப் பாடசாலைகள் விளையாட்டில் சாதிக்கத் தொடங்கின. வில்வித்தை கற்று மாணசீகக் குருவான துரோணரால் புடம்போடப்பட்ட அர்ச்சுணன் சிறந்தவனாக பறைசாற்றப்பட்ட போதும் குலத்தின் பெயரால் திறமைகள் பொசிங்கிட உள்ளம் வெதும்ப பின்தள்ளப்பட்டவர்கள் கர்ணன், ஏகலைவன் போன்ற வில்லாளர்கள். அதேபோல உடற்கல்வி டிப்ளேமாக் கற்கைநெறி மாணவர்களும் பாடசாலையில் சாதித்து விளை யாட்டுக்காகத் தம்மை அர்ப்பணித்து நிர்க்கதியில் விடப்பட்டவர்களுக்கு இக் கற்கைநெறி பெரும் வரப்பிரசாதமாக அமைந்தது. இல்லையேல் கர்ணன், ஏகலைவன் போல் விசுவாசம் இருந்தும் வீணாணவர்களாக ஒதுக்கப்பட்டிருப்பார்கள். இன்று விளையாட்டுத்துறையும்வளர்ந்திருக்க மாட்டாது.

உடற்கல்வி டிப்ளோமாக் கற்கைநெறியின் ஆரம்பம், அதனால் வெளியேற்றப்பட்ட டிப்ளோமா தாரிகளும் கிடைக்கப்பெற்ற உடற்கல்வி ஆசிரியர் நியமனமும்தமிழர்பிரதேசத்தில் விள்ளையாட்டை வினைதிறனாக பரம்பல் அடையச் செய்தது. கிராமப்புறப் பாடசாலைகளுக்கு முதன்முறையாக வழங்கப்பட்ட உடற்கல்வி ஆசிரியர்கள் ஆச்சரியப்படும் வகையில் தேவை உணர்ந்து சேவை புரிந்தனர். மாணவர்கள் மத்தியில் விளையாட்டுத் திறன் அதிகரிக்கப்பட்டுதேசிய வெற்றிகளை குவிக்கத் தொடங்கினர். தேசிய அணிகளில் இடம்பிடிக்கத் தொடங்கினர். தமிழர்களின் அடையாத்தினையும் தூக்கி நிறுத்தினர். அதேபோல், சிறந்த போட்டி நடுவர்கள் தரமான பயிற்றுவிப்பாளர்கள், ஆரோக்கியமான சுற்றுப்போட்டிகள், ஒழுங்கமைப்பாளர்கள் உருவாக உடற்கல்வி டிப்ளோமாக் கற்கைநெறியே காரணம் எனக் கூறுவதில் மிகை ஏதும் இல்லை.

யாழ். பல்கலைக்கழகத்தில் முதன் முறையாக உடற்கல்வி டிப்ளோமாக் கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்ட பின்னரே இலங்கையில் விளையாட்டில் ஈடுபடும் மாணவர்களுக்கு பட்டப்படிப்புத் தேவை என்னும் உணர்வு அரசுக்கு ஏற்பட்டது. அதனால் சப்பிரகமுவ பல்கலைக்கழகத்தில் விளையாட்டு விஞ்ஞான பட்டப்படிப்பும், விளையாட்டு முகாமைத்துவ பட்டப்படிப்பும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இருந்த போதும் யாழ். பல்கலைக்கழகத்தில் இக் கற்கைநெறி பட்டப்படிப்பாக மாறுவதற்கு சக்கர வியூகத்தில் சிக்கிய அபிமன்யு போல சாகவும் முடியாமல் வெளியில் வரமுடியாது வேதனைப் பட்டவனுக்கு கர்ணன் மோட்சம் கொடுத்தது போல் உடற்கல்வி டிப்ளோமாக் கற்கை நெறியின் இழுபறியில் பதவி வெறியர்களால் தட்டிக் கழிக்கப்பட்டு அந்தக் கற்கைநெறியை 2021 ஆம் ஆண்டு துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குராஜா தனது தற்துணிவாலும் மாணவர்களின் தேவை உணர்ந்தும் பட்டப்படிப்பாக ஆரம்பித்து வைத்தார். அதேபோல் இலங்கையில் சிறிஜெயவர்த்தனபுர, களனி பல்கலைக்கழகங்களில் விளையாட்டு விஞ்ஞானப் பட்டப்படிப்புக் காணப்படுகின்றது. இக்கற்கைநெறியின் ஆரம்பம் அமர்க்களம் என்பதால் விளையாட்டில் ஈடுபடும் மாணவர்கள் தமக்கு பட்டப்படிப்பை மேற்கொள்ள முடியும், தொழில் வாய்ப்பை பெறமுடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. இதனால் பாடசாலைகளில் பங்குபற்றும் போட்டியாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியுள்ளது டன், பெற்றோரும் அக்கறை காட்டத் தொடங்கினர்.

எனவே உடற்கல்வி டிப்ளோமாக் கற்கைநெறியின் 25 ஆவது ஆண்டை நினைவுபடுத்துவதுடன் கிராமப்புறப் பாசாலைகளின் விளையாட்டில் வினைதிறனான செற்பாட்டை முன்னெடுப்பதற்கு கிராம எழுச்சித்திட்ட விளையாட்டு அபிவிருத்தி என்னும் திட்டத்தைகிராமப்புறத்தைநோக்கி நகர்த்த வேண்டும். இதுவே இன்றைய தேவையாகும்.

காலைக்கதிர் Kalaikkathir

# நாட்டைப் பிளவுபடுத்த ஒரு போதும் இடமளியோம்: தமிழ், முஸ்லிம் மக்கள் எம்முடன் இணையவேண்டும்

## மஹிந்த ராஜபக்ச அழைப்பு



ஒரு தரப்பினரது குறுகிய நோக்கங்களுக்காக நாட்டை பிளவுப்படுத்த இடமளிக்க முடியாது. எமது கைகளில் இரத்தக் கறையில்லை. புதிய பரிணாமத்தை நோக்கி பயணிக்க தமிழ், முஸ்லிம் மக்கள் எம்முடன் ஒன்றிணைய வேண்டும். அடுத்த ஆண்டு இடம்பெறவுள்ள தேர்தல்களில் நாங்கள் வெற்றிப்பெறுவோம். எமது பயணத்தில் நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என முன்னாள் ஜனாதிபதியும், பொதுஜன பெரமுனவின் தலைவருமான மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

கொழும்பு சுஹததாஸ உள்ளக அரங்கில் இடம்பெற்ற பொதுஜன பெரமுனவின் இரண்டாவது தேசிய மாநாட்டில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது -

நாட்டு மக்கள் எம்மீது கொண்டுள்ள நம்பிக்கை எமது பாரிய பலமாகும். எமது நம்பிக்கையை மக்கள் பாதுகாத்துள்ளார்கள். பாரிய சவால்களுக்கு மத்தியில் மக்கள் எம்முடன் உள்ளார்கள் என்பது பலவிடயங்களில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பொதுஜன பெரமுனவின் தேசிய மாநாட்டை சுட்டிக்காட்டி சமூக வலைத்தளங்களில் சேறு பூசும் விமர்சனங்கள், தவறான கருத்துக்கள் பதிவேற்றப்பட்டுள்ளதை அவதானித்துள்ளோம். போலியான குற்றச்சாட்டுகள்,சேறு பூசல்கள் ஒன்றும் எமக்கு புதிதல்ல, 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இவ்வாறான நிலைமைக்கு முகம் கொடுத்தோம்.

30 வருடகால யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து நான் நாட்டை அபிவிருத்தி செய்தேன்.யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வர முடியாமல் ஒருசில அரச தலைவர்கள் பிரபாகரனுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார்கள்.ஒருசிலர் பிரபாகரனுக்கு ஆயுதம் வழங்கி புலிகளின் போராட்டத்தை தூண்டி விட்டார்கள்.

யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து தமிழ்,சி;ங்களம் மற்றும் முஸ்லிம் சமூகத்தினர் அமைதியாகவும் நல்லிணக்கத்துடனும் வாழும் சூழலை ஏற்படுத்தினேன்.பொருளாதாரத்தை மேம்படுத்தினேன். இவ்வாறான பின்னணியில் 2015 ஆம் ஆண்டு நாட்டு மக்கள் மாற்றத்தை எதிர்பார்த்தார்கள். நான் அதற்கும் இடமளித்தேன்.

2015 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கம் எமது பொருளாதார கொள்கைக்கு முரணாக செயற்பட்டது.தவறான தீர்மானங்கள்,காட்டிக் கொடுப்புகள் எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தின. 2015 ஆம் ஆண்டு அரசாங்கமே வரையறையற்ற வகையில் வெளிநாட்டு கடன்களை பெற்று நாட்டை பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளியது.

2019 ஆம் ஆண்டு பாரிய எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் மக்கள் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தினார்கள். நல்லாட்சி அரசாங்கத்தினால் பலவீனப்படுத்தப்பட்ட நிதி நிலைமையை நாங்கள் பொறுப்பேற்றோம்.கொவிட் பெருந்தொற்று தாக்கம் பொருளாதார பாதிப்பை தீவிரப்படுத்தியது.

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் நாட்டு மக்களை பாதுகாப்பதற்கு முன்னுரிமை வழங்கினோம்.பொருளாதார பாதிப்பை ஒரு தரப்பினர் தமது அரசியல் நோக்கத்துக்காக பயன்படுத்திக் கொண்டு அரகலய என்பதொன்றை தோற்றுவித்தார்கள்.

ஜனாதிபதியின் ஆடையை அணிந்துக் கொள்ள இன்று பலர் தயாராகவுள்ளார்கள். பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் அரசாங்கத்தை பொறுப்பேற்காமல், தப்பிச் சென்றவர்களிடம் மக்கள் ஒருபோதும் ஆட்சியதிகாரத்தை ஒப்படைக்கப் போவதில்லை.

ஒருசிலர் தமது குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக இளைஞர்களைத் தவறான வழிநடத்துகிறார்கள். தேசிய மற்றும் சர்வதேச ரீதியிலான ஆலோசனைகள் மற்றும் கட்டளைகளுக்கு அமைய அவர்கள் நாட்டுக்கு எதிராக செயற்படுகிறார்கள். ஒரு தரப்பினரது குறுகிய நோக்கங்களுக்காக நாட்டைப் பிளவுப்படுத்த இடமளிக்க முடியாது.

எமது கைகளில் இரத்தக் கறையில்லை. புதிய பரிணாமத்தை நோக்கி பயணிக்க தமிழ்,முஸ்லிம் மக்கள் எம்முடன் ஒன்றிணைய வேண்டும்.அடுத்த ஆண்டு இடம்பெறவுள்ள தேர்தல்களில் நாங்கள் வெற்றிப்பெறுவோம்.எமது பயணத்தில் நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். - என்றார். (05)

# மாந்தை மேற்கில் வெள்ளம் 72 குடும்பங்கள் இடம்பெயர்வு









மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக மழை பெய்து வருகின்றமையால் மன்னாரில் பெரும்பாலான தாழ் நில பிரதேசங்கள் வெள்ள அனர்த்தத்துக்கு உள்ளாகும் வாய்ப்பு காணப்படுவதாக மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் மாவட்ட உதவி பணிப்பாளர் கே. திலீபன் தெரிவித்துள்ளார்.

மேலும், வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் தொடர்ந்து பலத்த மழை பெய்வதால் பாலியாறு மற்றும் பரங்கியாறு போன்ற ஆறுகளின் நீர் மட்டங்கள் உயர்வடையும் நிலை காணப்படுகிறது.

அவ்வாறு நீர் மட்டம் அதிகரிக்கும்சந்தர்ப்பங்களில்மன்னார் - யாழ்ப்பாணம் (ஏ-32) பிரதான வீதி வெள்ள நீரில் மூழ்கக்கூடும்.

எனவே, அந்த வீதியூடாக பயணிக்கும் மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறும் இதன்போது பொலிஸார், இராணுவத்தினரின் அறிவுறுத்தல்களை பின்பற்றுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அதேபோல், மன்னார் தீவு மற்றும் பெரும் நிலப்பரப்புகளிலுள்ள தாழ் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்குவதற்கான அறிகுறிகள் தென்படுவதால் அப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்வதற்கான நடவடிக்கைகளைஉரியதரப்பினா் மேற்கொள்ள வேண்டும்.

மேலும்,வெள்ளநீர்வடிந்தோட வடிகான்களைத் துப்புரவு செய்து, வெள்ள நீர் கடலுக்குள் செல்லும் வகையில் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

இதேவேளை, வெள்ளம் காரணமாக மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள தேவன்பிட்டி பகுதியில் 72 குடும்பங்களைச் சேர்ந்த 161 பேர் இடம்பெயர்ந்துதற்காலிகமுகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான உணவுகள் இராணுவத்தினரால்வழங்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், மன்னார் பிரதேச செயலக பிரிவில் 30 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்து உறவினர்கள் வீடுகளில் தங்கியிருக்கின்றனர் என மன்னார் அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

எனவே, தொடர்ச்சியாக மழை பெய்து வருகின்றமையால் பாதுகாப்புடன்செயற்படுமாறுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேலும், தற்போதைய பலத்த மழை மற்றும் வெள்ள அனர்த்த நிலைமையில் மக்கள் அவசர உதவிக்கு மன்னார் அனர்த்த முகாமைத்துவபிரிவுதொலைபேசி இலக்கமான 023-2250133 எனும் இலக்கத்துக்கும், மன்னார் பிரதேச செயலக பிரிவு தொலைபேசி இலக்கமான 076-1258120 எனும் இலக்கத்துக்கும் தொடர்புகொள்ளலாம். (05)

# பெல்ஜியம் – இலங்கை நாடாளுமன்ற தொடர்பு மேம்பாடு குறித்து ஆராய்வு!

பெல்ஜியம் மற்றும் இலங்கை நாடாளுமன்றங்களுக்குஇடையிலான தொடர்புகளையும், கருத்துப் பரிமாற்றங்களையும் மேலும் வலுப்படுத்துவது தொடர்பாக இரு நாடுகளினதும் உயர்மட்ட பிரதிநிதிகள் ஆராய்ந்துள்ளனர்.

பெல்ஜியத்துக்கான இலங்கை தூதுவர் கிரேஸ் ஆசீர்வாதம் மற்றும் பெல்ஜியம் இலங்கை நாடாளுமன்ற நட்புறவுக் குழுவின் தலைவர் அலெஸியா க்ளேஸ் ஆகியோருக்கு இடையிலானசந்திப்புவியாழக்கிழமை ப்ருசேல்ஸில் நடைபெற்றது.

தூதுவர் கிரேஸ் ஆசீர்வாதத்தின் பதவிக்காலம் முடிவுக்கு வந்திருக்கும் நிலையில், பிரியாவிடை வழங்கும் விதமாக நடைபெற்ற இந்தச்சந்திப்பில் பெல்ஜியத்துக்கும் இலங்கைக்கும் இடையிலான நாடாளுமன்றத் தொடர்புகளை மேம்படுத்துவது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது இரு நாடுகளுக்கு இடையிலான புரிந்துணர்வு மற்றும் நட்புறவை மேம்படுத்திக் கொள்வதற்கு அவ்விரு நாடுகளினதும் அரசியல் பிரதிநிதிகள், கொள்கை வகுப்பாளர்களுக்கு இடையிலான கருத்துப் பரிமாற்றம் அவசியம் என இருதரப்பினரும் சுட்டிக்காட்டியதுடன், கொவிட் 19 வைரஸ் பெருந்தொற்றை அடுத்து இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியானது இரு நாட்டு நாடாளுமன்றங்களுக்கு இடையிலானதொடர்புகளில்மந்தகரமானநிலையைத்தோற்றுவித்ததாகவும் ஏற்றுக்கொண்டனர்.

அதேவேளை எதிர்வரும் 2024 ஆம் திகதி பெல்ஜியத்தில் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாக இலங்கைத் தூதுவர் கிரேஸ் ஆசீர்வாதத்திடம் பகிர்ந்துகொண்ட அலெஸியா க்ளேஸ், புதிதாக தெரிவுசெய்யப்படும் நாடாளுமன்றம் இரு நாடுகளுக்கும் இடையிலான நாடாளுமன்றத் தொடர்புகளை மீண்டும் வலுவாகக் கட்டியெழுப்புவதை முன்னிறுத்தி செயலாற்றும் எனவும் நம்பிக்கை வெளியிட்டார். (05)

# பொறுமையை கோழைத்தனமென கருத வேண்டாம்; தேசிய தேர்தல்களில் நாங்கள் வெற்றிப்பெறுவோம்!

## பஷில் ராஜபக்ச அபரிமித நம்பிக்கை

விமர்சனங்களைக் கண்டு பொறுமையாக இருப்பதால் எம்மை கோழைத்தனம் என்று கருத வேண்டாம். மக்களாணையுடன் மீண்டும் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவோம்.கொவிட் பெருந்தொற்றுதாக்கம், பயங்கரவாதம் ஆகிய உயிரச்சுறுத்தலில் இருந்து நாட்டு மக்களை ராஜபக்ஷர்களே காப்பாற்றினார்கள். எதிர்வரும் காலங்களில் இடம்பெறவுள்ள தேசிய தேர்தல்களில் பொதுஜன பெரமுனவே ஆட்சியமைக்கும் என பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகரும்,முன்னாள் நிதியமைச்சருமான பஷில் ராஜபக்ச தெரிவித்தார்.

கொழும்பு சுஹததாஸ உள்ளக அரங்கில் இடம்பெற்ற பொதுஜன பெரமுனவின் இரண்டாவது தேசிய மாநாட்டில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

2016 ஆம் ஆண்டு பாரிய சவால்களுக்கு மத்தியில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஸ்தாபிக்கப்பட்டு பாரம்பரியமான அரசியல் கட்சிகளை வீழ்த்தி சகல தேசிய தேர்தல்களிலும் நாங்கள் வெற்றிபெற்றோம். ராஜபக்சர்களுக்குஎதிராககடந்தஆண்டு கட்டவிழ்த்து விடப்பட்ட சகல வன்முறைகளையும் மக்களாணையுடன் வெற்றிகொண்டுள்ளோம்.

அடுத்த ஆண்டு இடம்பெறவுள்ள சகல தேசிய தேர்தல்களிலும் நாங்கள் வெற்றிபெறுவோம். பொதுஜன பெரமுனவே பலமான அரசியல் சக்தியாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஆட்சியில் உள்ளபோதும், ஆட்சியில் இல்லாத போதும் நாங்கள் எவர் மீதும் வைராக்கியம் கொள்ளவில்லை. பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் கடந்த ஆண்டு அரசியல் பழி தீர்க்கப்பட்டது. எமது கட்சி ஆதரவாளர்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. இவற்றுக்கு இதுவரை நியாயம் கிடைக்கவில்லை.

30 வருடகால பயங்கரவாத யுத்தத்தை நிறைவு செய்து ராஜபக்ஷர்களே நாட்டை அபிவிருத்தி செய்தார்கள். இந்த உரிமையை எவருக்காகவும் விட்டுக் கொடுக்கப் போவதில்லை. சமூக வலைத்தளங்களில் எம்மீது சேறு பூசப்படுகிறது. நாங்கள் பல விமர்சனங்களுக்குள்ளாக்கப்படுகிறோம்.

விமர்சனங்களைக்கண்டுஅமைதியாக இருப்பதால் எவரும் எம்மைக் கோழைகள் என்று கருதக் கூடாது. சிங்கத்தை சீண்டினால் அதன் விளைவு பாரதூரமானதாக இருக்கும் என்பதை எம்மை விமர்சிப்பவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். எமது அரசியல் எழுச்சி அடுத்த ஆண்டு உறுதிப்படுத்தப்படும். - என்றார். (05)

காலைக்கதிர் Kalaikkathir



## சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரிக்கு குப்பை சேகரிக்கும் வாளிகள் வழங்கல்! சுன்னாகம் லயன்ஸ் கழக அனுசரணையில்




சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306 பி1 இன் மாவட்ட ஆளுநர் லயன் பிளஸிடஸ் எம் பீற்றர் அவர்களால் டிசெம்;பர் மாதம் 4 ஆம் திகதி முதல் டெங்கு விழிப்புணர்வு மாதமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த வகையில் சுன்னாகம் லயன்ஸ் கழகத்தால் டெங்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கு வலிகாமம் கல்வி வலயத்தில் உள்ள ஒவ்வொரு பாடசாலைகளிலும் நடைபெற்று வருகின்றது.

இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்கை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பொதுச்சுகாதாரப் பரிசோதகர் சி.கார்த்தீபன், அஜந்தன் ஆகியோர் நிகழ்த்தி வருகின்றனர்.

அவர்களின் இந்தச் செயற்பாட்டின் மேலும் ஒரு பகுதியாக வலிகாமம் வலயத்திலுள்ள தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளுக்கு கழிவுகளைத் தரம்பிரித்து இடுவதற்கு மூன்று வெள;வேறுவர்;ணங்களைக்கொண்ட குப்பை வாளிகள் வழங்கப்பட்டன.

அதன் ஒரு செயற்பாடாக சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முதல்;வர் லயன் மு.செல்வஸ்தானிடம் சுன்னாகம் லயன்ஸ் கழக உறுப்பினர் லயன் சசீந்திரராஜாவின் அனுசரணையில் மூன்று குப்பை வாளிகள் வழங்கிவைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சுன்னாகம் லயன்ஸ் கழகச் செயலாளர் லயன் சி.ஹரிகரன், பிராந்தியத் தலைவர் லயன் பா.மரியதாஸ், வலயத் தலைவர் லயன் க.டினேஸ், மாவட்டத் தலைவர் லயன் தே.அகிலன், கழக உறுப்பினர் லயன் சுகுமார், லயன் விஜிந்தன் ஆகியோர் பங்குகொண்டு வழங்கிவைத்தனர். (05)

# குற்றவாளிகளை அடையாளம் காணும் செயல்முறை அறிமுகம்

போதைப்பொருள் தொடர்பான நடவடிக்கைகளில் கைது செய்யப்பட்ட குற்றவாளிகளை அடையாளம் காணும் செயல்முறையை நெறிப்படுத்தும் புதிய அமைப்பை பொலிஸார் அறிமுகப்படுத்தியுள்ளனர்.

இதற்காக அனைத்து பொலிஸ் நிலையங்களையும் இணைக்கும் விசேட தரவு அமைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

புதிய முறையின் கீழ் போதைப்பொருள் குற்றத்துடன் தொடர்புடைய எந்தவொரு நபரின் உள்ளீட்டையும் செயல்படுத்துவதன் மூலம் பொலிஸாரால் கடந்த கால குற்றவியல் பதிவுகளை மீட்டெடுக்க முடியும்.

போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பான அனைத்து கைதுகளின் விவரங்களும் தரவு அமைப்பில் புதுப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தரவு அமைப்பை அறிமுகப்படுத்தும் நிகழ்வொன்று பொலிஸ் தலைமையகத்தில் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் மற்றும் பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் ஆகியோரின் பங்களிப்புடன் இடம்பெற்றது.

அதன்போது மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் பிரிவுகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் ஆகியோருக்கு திட்டமிடப்பட்ட விசேட போதைப்பொருள் தொடர்பான நடவடிக்கைகள் குறித்து விளக்கமளிக்கும் செயலமர்வும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (05)

## மாத்தறையில் 'பொலி முதலாளி'யின் வீட்டின் மீது துப்பாக்கிப் பிரயோகம்!

### சுவர், கார், ஓட்டோ சேதம்

மாத்தறை, பள்ளிமுல்ல, சம்போதி மாவத்தையில் வசிக்கும் வட்டிக்குப் பணம் வழங்கும் (பொலி முதலாளி) வர்த்தகர் ஒருவரின் வீட்டின் மீது மோட்டார்சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் துப்பாக்கிச் சூடு நடத்தினர் என மாத்தறை தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டில் வீட்டினருக்கோ அல்லது வேறு எவருக்கோ எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என்பதுடன் வீட்டின் சுவர், வீட்டின் முன் நிறுத்தப்பட்டிருந்த கார் மற்றும் ஓட்டோ என்பன சேதமடைந்துள்ளன.

கைத்துப்பாக்கி மூலம் சூடு நடத்தப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கும் பொலிஸார், அருகில் காணப்பட்ட வெற்று தோட்டாக்கள் ஐந்தையும் கைப்பற்றினர்.

வெளிநாட்டில் உள்ள சக்திவாய்ந்த பாதாள உலகக் குழுத் தலைவர் ஒருவரின் ஆலோசனையின் பேரில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (05)



## நாட்டு மக்கள் ஆட்சி அதிகாரத்தை தப்பிச்சென்றோரிடம் ஒப்படைக்கார்!

### மஹிந்த சாட்டை

நெருக்கடியான சூழ்நிலையில் ஆட்சியதிகாரத்தை பொறுப்பேற்காமல் தப்பிச் சென்றவர்களிடம் நாட்டு மக்கள் ஆட்சியதிகாரத்தை ஒப்படைக்கப் போவதில்லை என மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

இதேவேளை, எம் மீதான விமர்சனங்கள் ஒன்றும் புதிதல்ல எனவும் 2015 ஆம் ஆண்டும் இவ்வாறான சேறு பூசல்களே காணப்பட்டன எனவும் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய மாநாட்டில் மஹிந்த ராஜபக்ச இதனைத் தெரிவித்தார். (05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சநேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



காலைக்கதிர் Kalaikkathir

## புலம்பெயர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் வளர்ச்சியடைந்துள்ளதுடன், நீண்ட காலமாக தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட இனப்படுகொலைக்கு நீதியை நிலைநாட்டுவதற்காகஇவ்வமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளின் பங்காளி அமைப்புகள் செயற்பட்டு வருகின்றன.

தமிழ் மக்களின் பாரம்பரிய மற்றும்வரலாற்றுதாயகத்தில்தமிழ் மக்களின்சுயநிர்ணயஉரிமையின் அடிப்படையில்நீடித்தஅரசியல்தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளன.

இதேநேரம்இலங்கையில்தமிழ் மக்களின்நிலைமைமோசமடைந்து, அவர்களின் தாயகத்தில் அடிப்படை உரிமைகள் அற்ற திறந்தவெளி சிறைச்சாலைக்குள் வாழும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஐ.நா.மனிதஉரிமைகள்பேரவையினால் நீக்க வேண்டுமென்று சுட்டிக்காட்டப்பட்டுள்ள கொடூரமான பயங்கரவாதத் தடைச் சட்டம், சுதந்திரப்போராட்டத்தில்உயிரிழந்த தங்கள் மகன்கள், மகள்கள் மற்றும் உறவினர்களை நினைவுகூரும் தமிழ் மக்களை துன்புறுத்தவும் சிறையில் அடைக்கவும் இலங்கை அரசால் பயன்படுத்தப்படுகிறது.

தொல்பொருள் திணைக்களம், புண்ணிய மதத் தலங்களை அழித்து, அந்த புனிதத் தலங்களுக்கு பதிலாக பௌத்த நினைவுச் சின்னங்களையும், பௌத்த விகாரைகள் நிர்மாணிக்கும் செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்றது.

பௌத்தர்கள் யாரும் வசிக்காத தமிழர் தாயகத்தில் ஆயிரம் பௌத்த விகாரைகளை கட்டுவதாக இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.

கடந்த ஏழு தசாப்தங்களில் தமிழ்த் தலைவர்களுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்களை இரத்து செய்தமைக்கான நீண்ட ஆவணப்படுத்தப்பட்ட வரலாற்றை இலங்கை கொண்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை தமிழ் மக்களுக்கு நீதி வழங்குவதற்காகபலதீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது. எவ்வாறாயினும், தீர்மானங்களின் பரிந்துரைகள் எவற்றிலும் இதுவரை இலங்கை அரசாங்கத்திடமிருந்து உறுதியான முன்னேற்றம் வெளிப்படுத்தப்படவில்லை.

ஆகவே, தமிழ் மக்களுக்கு எதிரான சர்வதேச மனித உரிமைப் பிரகடனத்தில் உள்ள 30 சரத்துக்களையும் இலங்கை தண்டனையின்றி மீறியுள்ளது என்பதை மீண்டும் வலியுறுத்த வேண்டும்.

தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு காரணமான ஒவ்வொரு படைச் சிப்பாயையும் பாதுகாப்பதாக சபதம் செய்தேஇலங்கையின்தற்போதைய தலைமை உட்பட அடுத்தடுத்து ஆட்சிக்கு வருபவர்கள் உள்ளனர்.

எனவே, தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலைக்கு இலங்கை எந்த வகையிலும் உண்மையான நீதியை நிலைநாட்டும் அல்லது தமிழ் மக்களின் நியாயமான அபிலாஷைகளை நிறைவேற்றும் நிரந்தர அரசியல் தீர்வை வழங்கும் என்றுஎவரும்எதிர்பார்க்கமுடியாது.

2024 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு வழங்கிய வாக்குறுதிகளை இலங்கைநிராகரிக்கும்என்றே எதிர்பார்க்கப்படுகிறது. மேற்கூறியவற்றின் அடிப்படையில், இலங்கைமீண்டும் ஒருமுறை துறவறம் செய்ய விரும்புகிறது என்பது தெளிவாகத் தெரிகிறது.

எனவே உலகத்தமிழர் பேரவை மற்றும் அதனுடன் இணைந்த சதிகாரர்களின் துரோக முயற்சியானது, சர்வதேச சமூகத்திலிருந்தும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆய்விலிருந்தும் இலங்கையை பாதுகாக்கும் வெறுக்கத்தக்க முயற்சியாகும்.

தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட இனப்படுகொலைக்கு நீதி கிடைக்க நாம் எடுக்கும் அனைத்து முயற்சிகளையும் சீர்குலைக்கும் முயற்சியே உலகத்தமிழர் பேரவையின் இமையமலைப்பிரகடன நிகழ்ச்சியாகும்.

இந்தஏமாற்றுமுயற்சிகளைபுறக்கணிக்குமாறு சர்வதேச சமூகத்தை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். அரைகுறையான தீர்வு தமிழ் தேசத்தின் பாதுகாப்பை மேலும் சீரழிக்கும்.

தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட இனப்படுகொலைக்கு சர்வதேச சமூகம் பரிகார நீதி வழங்குவதுடன், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதன் அடிப்படையில் நீண்டகாலஅரசியல்தீர்வைக்காண உதவ வேண்டும் என்றுள்ளது.

## டெங்கு அறிகுறி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் போதனா வைத்தியசா லைக்கு அப்பால் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை, ஊர்காவற்துறை ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைகளிலும் டெங்கு நோயாளிகளை பராமரிக்க விடுதிகள் காணப்படுகிறன.

அதேவேளைஅச்சுவேலிபிரதேச வைத்தியசாலை, கோப்பாய்பிரதேச வைத்தியசாலை, சண்டிலிப்பாய் பிரதேச வைத்தியசாலைகளிலும் டெங்குநோய்அறிகுறிதொடர்பிலான இரத்த பரிசோதனைகளை மேற்கொள்ளலாம் - என்றார்.

## இரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு நாட்களுக்கு மேல் காய்ச்சல்நீடித்துதலையிடி,சத்தி,வயிற்றோட்டம், மூட்டு நோ போன்ற அறிகுறிகள் வந்தால் அருகில் உள்ள அரச வைத்தியசாலையை நாடுவது நல்லது.

இரண்டு நாட்களுக்கு மேல் காய்ச்சல் நீடித்தால் கர்ப்பிணிகள், நீரிழிவு நோயாளர்கள், வேறு நோயுள்ளவர்கள், வீட்டில் பராமரிக்க ஆட்கள் இல்லாதவர்கள் வைத்தியசாலையைநாடவேண்டும்.

குருதிப் பரிசோதனையில் வெண்கலங்களின் எண்ணிக்கை 5000ற்கு குறைவாகவும் குறுதிச் சிறுதட்டுஎண்ணிக்கை13000ற்கு குறைவடைந்தால் வைத்தியசாலையை நாடவேண்டும்.

நுளம்பு இடும் முட்டை வரட்சியான காலத்தில் ஆறு மாதங்களுக்கு இருக்கும். மழை காலங்களிலும் நீர் தேங்கும்போது நுளம்பு பரவும்.வீடு,சுற்றாடல், வீதி என்பவற்றைசுத்தமாகவைத்துக்கொள்ள வேண்டும்.நுளம்பு அதிகரித்தால் டெங்கை கட்டுப்படுத்த முடியாது.

பாடசாலை பல்கலைக்கழக மாணவர்கள் அரச தனியார் ஊழியர்கள் சிரமதான நடவடிக்கையில் ஈடுபட்டு நீர் தேங்காதவாறு சூழலை பேணவேண்டும்.

டெங்கு நுளம்பு காலை வேளையிலும் மாலை வேளையிலும் அதிகம் உலாவுகிறது. குறித்த நேங்வெளியில் மனிதர்கள் உலாவுவதை தவிர்க்க வேண்டும்.நுளம்பு வலைகளைப் பாவிக்கவேண்டும். உடலில்நுளம்பு கடிக்காதவாறு தைலங்களை பயன்படுத்த முடியும் - என்றார்.

## கைதுகள்,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பங்கேற்றிருந்தனர்.

மக்கள் போராட்ட இயக்கத்தின் நிறைவேற்றுக்குழு உறுப்பினரான ஜோதிராஜ் ஜெகந் தெரிவிக்கையில், மக்கள் ஆணையில்லாது ஆட்சிக்கு வந்துள்ள நவலிபரல் வாதியான ரணில் விக்கிரமசிங்க டெல்லிக்குச் சென்றுதிருகோணமலையைமையப்படுத்திய பொருளாதார வலயத்தை உருவாக்குவது தொடர்பில் ஒப்பந்தத்தைச் செய்துள்ளார்.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் பாதிக்கப்படப்போவது, சாதாரண கடற்றொழிலாளர்களும், உழவர்களும், மக்களுமே தவிர ஆட்சியாளர்களோ அவர்களுக்குச் சாதகமானவர்களோ அல்லர்.

கோட்டாபய மக்கள் போராட்டத்தின் மூலமாக விரட்டியடிக்கப்பட்டார். அவருக்குஎதிரானபோராட்டம் விவசாயிகளின் மூலமாகவே ஆரம்பமானது. அதனை நினைவுபடுத்தும்வகையில்இந்தப்போராட்டம் ரணிலைவீட்டுக்குஅனுப்புவதற்கான போராட்டமாக மாறும் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றோம் என்றார்.

## பெரமுன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முரணானதாகும். இதுதான் பொதுஜனபெரமுனவிடத்தில் உள்ள பிரச்சினையாகும். அது ஐக்கிய தேசியக் கட்சியுடனான கரம் பிடித்திருப்பது பொருந்ததாவொன்றாகும்.

மொட்டுக்கட்சியின் கொள்கையை ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து ஒருபோதும் நடைமுறைப்படுத்த முடியாது. ஐ.தே.கவுடனான இணைந்த பயணம் பொது ஜன பெரமுனவின் கொள்கைக்கு முரணானதாகும் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர்
Kalaikkathir

# பாலியாறு பெருக்கெடுத்து மன்னாரில் பல பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன!



மன்னாரில் வியாழக்கிழமை மதியம் முதல் தொடர்ந்து பெய்த கடும் மழை காரணமாக கட்டுக்கரை குளம்வான்பாய ஆரம்பித்துள்ளதுடன் மன்னார் - யாழ்ப்பாணம் பிரதான வீதி உள்ள பாலியாறு பெருக்கெடுத்துள்ளது.

குறிப்பாக பாலியாறு, சிப்பியாறு, முழுவதும் நிறைந்து வீதிக்கு மேலாக நீர் பாய்ந்து வருவதுடன் அருகில் உள்ள கிராமங்கள் முழுவதும்வெள்ளப்;பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது.

மேலும் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஆட்காட்டிவெளி மற்றும் மாந்தை கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள வயல் நிலங்கள் முழுவதும் வெள்ள நீர் சூழ்ந்துள்ளது.

அதே நேரம் மன்னார் பிரதேச செயலக பிரிவில் கடும் மழை காரணமாக ஜீவபுரம், ஜிம்ரோன் நகர், சாந்திபுரம் போன்ற கிராமங்களும் தீவுக்கு வெளியில் தேத்தாவட, தேவன் பிட்டி, மூன்றாம் பிட்டி போன்ற கிராமங்களும் நீரில் மூழ்கியுள்ளன.

தொடர்ச்சியாக மழையுடன் கூடிய காலநிலை நிலவும்பட்சத்தில்பலநூற்றுக்கணக்கானகுடும்பங்கள் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

(05)

# நுவரெலியாவில் உணவகத்தில் தீ!



நுவரெலியா பிரதான நகர், லோஸன் வீதியில் அமைந்துள்ள உணவகமொன்றில் வெள்ளிக்கிழமை காலை தீ விபத்தொன்று ஏற்பட்டுள்ளது.

இந்தத் தீப்பரவலால் யாருக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை எனத் தெரியவருகிறது.

எனினும்,உணவகத்தின்சமையல் அறையில் காணப்பட்ட பொருள்கள் பல தீயில் கருகிவிட்டன.

இந்தத் தீவிபத்துக்கான காரணம் இதுவரை தெரியவராத நிலையில், இந்தச்சம்பவம்தொடர்பில்நுவரெலியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (05)

# சர்வதேச நாணய நிதியத்தின் அனுமதிக்கு இலங்கை வர்த்தக சம்மேளனம் வரவேற்பு!

சர்வதேசநாணயநிதியத்தால் இலங்கைக்கான இரண்டாம் கட்ட கடன்நிதி விடுவிக்கப்பட்டிருப்பது குறித்து வரவேற்பு வெளியிட்டிருக்கும் இலங்கை வர்த்தக சம்மேளனம் (சிலோன் சேம்பர் ஒஃப் கொமர்ஸ்), நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமைவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட மறுசீரமைப்புக்களைத் தொடர்ந்து முன்னெடுக்கவேண்டுமென வலியுறுத்தியுள்ளது.

சர்வதேசநாணயநிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிவசதிச்செயற்திட்டத்தின்கீழ் இலங்கைக்கு இரண்டாம் கட்டமாக 337 மில்லியன் டொலர் கடன்நிதியை வழங்குவதற்கு நாணய நிதியப் பணிப்பாளர் சபை கடந்த செவ்வாய்க்கிழமை அனுமதி அளித்துள்ளது.

இது தொடர்பாக வரவேற்பு தெரிவித்து வெளியிட்டிருக்கும் அறிக்கையிலேயே இலங்கை வர்த்தக சம்மேளனம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது –

சர்வதேசநாணயநிதியம் அளித்துள்ள அனுமதி மிகமுக்கியத்துவம் வாய்ந்தது என்பதுடன், இதனூடாக இலங்கைக்கு சுமார் 337 மில்லியன் டொலர் நிதி கிடைக்கப்பெறும். இது மிகமுக்கிய நிபந்தனைகள் மற்றும் அடைவுகளைப் பூர்த்தி செய்வதில் இலங்கை கொண்டிருக்கும் கடப்பாட்டை நன்கு வெளிப்படுத்துகின்றது.

ஆட்சியியல் ஆய்வு அறிக்கையை வெளியிடல் மற்றும் சர்வதேச கடன்வழங்குநர்களுடன் கடன்மறுசீரமைப்பு தொடர்பான இணக்கப்பாட்டை எட்டுதல் போன்றவை நாணய நிதியத்தின் நிபந்தனைகளில் உள்ளடங்குகின்றன.

இவைவருமானத்தைஅடிப்படையாகக்கொண்ட நிதியியல் கொள்கைவகுப்பு, பரந்துபட்ட நிதி மேற்பார்வை, கடன் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தல், கையிருப்பை கட்டியெழுப்பல், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தல் மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டைப்பேணல்ஆகியவற்றைஅடைவதில் இலங்கையின் வலுவான அர்ப்பணிப்பைக் காண்பிக்கின்றன. அதுமாத்திரமன்றி ஆட்சியியல் மேம்பாடு மற்றும் சமூகத்தில் நலிவடைந்த நிலையிலுள்ள தரப்பினரைப் பாதுகாத்தல் என்பவற்றை முன்னிறுத்திய அரசாங்கத்தின் நடவடிக்கைகள் பாராட்டத்தக்கவையாகும்.

அதேவேளை, ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுவது அவசியமாகும். குறிப்பாக அண்மையகாலங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட வரி அறவீடுகள் பணவீக்கத்தில் தாக்கம் செலுத்தியிருப்பதுடன், பொதுமக்களின் கொள்வனவு ஆற்றலை வெகுவாகப் பாதித்திருக்கின்றது. எனவே, இவற்றை நேர்மறையான பாதையில் கொண்டுசெல்வதற்கு பொருளாதார வளர்ச்சியை அடைந்துகொள்வது அவசியமாகும்.

மேலும் சுற்றுலாத்துறை, துறைமுகங்கள், புதுப்பிக்கத்தக்க சக்திவலு மற்றும் ஏற்றுமதி போன்ற துறைகளிலும், குறிப்பாக விவசாயத்துறையில் மேம்படுத்தப்பட்ட டிஜிற்றல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதிலும் விசேட கவனம் செலுத்தி வருகின்றோம். அந்தவகையில் நிதியியல் செயற்திறன், வெளிப்படைத்தன்மை மற்றும் ஆட்சியியல் நிர்வாகம் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமைவான டிஜிற்றல் தொழில்நுட்பப் பிரயோகம் இன்றியமையாததாகும்.

இவற்றை நடைமுறைப்படுத்துவதை இலக்காகக்கொண்டு அரசாங்கத்துடனும், சர்வதேச நாணய நிதியம் போன்ற இதர கட்டமைப்புக்களுடனும்ஒன்றிணைந்துசெயலாற்றத் தயாராக இருக்கின்றோம் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (05)




# நலிவுற்றுள்ள நிலையிலுள்ள சமூகங்களுடன் நேரடியாக பணியாற்ற அதிக முக்கியத்துவம்!

## ஐ.நா. அபிவிருத்தி செயற்திட்ட வதிவிடப்பிரதிநிதி தெரிவிப்பு

இலங்கையில்நலிவுற்றநிலையிலுள்ள சமூகங்கள் மற்றும் குடும்பங்களுக்கு உதவும் வகையில் அவர்களுடன் இணைந்துநேரடியாகப்பணியாற்றுவதற்கு அதிக முக்கியத்துவம் வழங்கியிருப்பதாக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி செயற்திட்டத்தின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி அசூஸா குபோட்டா தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடியை அடுத்து நாட்டிலுள்ள வறிய மற்றும் பின்தங்கிய சமூகப்பிரிவினர் வருமான வீழ்ச்சி, உணவுப்பாதுகாப்பின்மை, போசணை குறைபாடு உள்ளிட்ட பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்து-வருகின்றனர். இவ்வாறானதொரு பின்னணியில் அவர்களுக்கு உதவுவதை இலக்காகக்கொண்டு முன்னெடுக்கப்பட்டுள்ள செயற்திட்டம் குறித்துத் தெளிவுபடுத்துகையிலேயே அசூஸா குபோட்டா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் கூறியவை வருமாறு –

அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூகங்களுக்கு இடையில் பரந்துபட்ட வகையில் மீளெழும் தன்மையைக் கட்டியெழுப்பல் ஆகியவற்றை இலக்காகக்கொண்டு இலங்கையில் நலி வுற்ற நிலையிலுள்ள சமூகங்கள் மற்றும் குடும்பங்களுடன் நேரடியாக இணைந்து பணியாற்றுவதற்கு நாம் அதிக முக்கியத்துவம் வழங்கியிருக்கின்றோம். அதனைச் செய்வதற்கு நாம் பல்வேறு தரப்பினருடன் ஒன்றிணைந்து செயலாற்றவேண்டும்.

அதன்படி, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி செயற்திட்டமும் இலங்கையில் இயங்கி வரும் ஹிர்டரமனி ஆடைஉற்பத்தி நிறுவனமும் இணைந்து முன்னெடுக்கவிருக்கும் உதவிச்செயற்திட்டத்தின் ஊடாக சுமார் 100 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயனடையும். குறிப்பாக அந்தக் குடும்பங்கள் பழங்கள் மற்றும் மரக்கறிகளைப் பயிரிடுவதற்கு அவசியமான ஒத்துழைப்பு வழங்கப்படுவதுடன், அதனூடாக அந்தக் குடும்பங்களின் வருமானம் மற்றும் போசணைசார் தேவைகள் பூர்த்திசெய்யப்படும்என்று குறிப்பிட்டார். (05)

# மட்டக்களப்பு கரடியனாறு காட்டுப் பகுதியில் கசிப்பு, கோடா பரல்களுடன் இருவர் கைது!

மட்டக்களப்பு கரடியினாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஈரளக்குளம் பஞ்சுமரத்தடி காட்டு பிரதேசத்தில் பொலிஸார் மேற்கொண்ட திடீர் சுற்றி வளைப்பு தேடுதல் நடவடிக்கையின் போது எட்டு பாரிய பரல்களில் கசிப்பு மற்றும் கோடாவுடன் இரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என கரடியனாறு பொலிஸ் நிலைய போதை ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி எச்.எம். சியாம் தெரிவித்தார்.

கரடியனாறு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துார ஹேமச்சந்திரனின் தலைமையின் கீழ் போதை ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி எச் எம் சியாம் வழங்கிய தகவலின் அடிப்படையில் பொலிஸ் குழுவினர் வியாழன் மாலை 3 மணியளவில் குறித்த சுற்றி வளைப்பு தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

தற்போது சந்திவெளி மற்றும் சித்தாண்டி பிரதேசங்களை சேர்ந்த 24 மற்றும் 25 வயதுடைய இரண்டு இளைஞர்கள் 8 பரள்களில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கோடா மற்றும் கசிப்புடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேகம் நபர்கள் ஒரு சுற்றுலா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். கரடியனாறு பொலிஸார் இது தொடர்பாக மேலதிக விசாரணைகள் நடத்தி வருகின்றனர் . (05)

# பலப்பிட்டிய முகத்துவார கடலில் நீராடிய மாணவர் ஒருவர் மாயம்!

காலி - பலப்பிட்டிய பாலத்திற்கு அருகிலுள்ள முகத்துவாரக் கடலில் நீராடிய மாணவன் காணாமல்போயுள்ளார் என அஹுங்கல பொலிஸார் தெரிவித்தனர்.

காணாமல்போனவர் கொட்டாவமத்தேகொடபிரதேசத்தைசேர்ந்த13வய-துடைய பாடசாலை மாண வனாவார். இவர்தனதுபெற்றோருடன்பலப்பிட்டிய பிரதேசத்தில் உள்ள தனது தாத்தா, பாட்டியை பார்க்கச் சென்ற நிலையில் தனதுசகநண்பர்களுடன்முகத்துவாரக் கடலில் நீராடிக் கொண்டிருந்த போதே நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார். காணாமல்போன மாணவனை தேடும் பணியில் பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகள் தீவிரமாக செயற்பட்டு வருகின்றனர். (05)

# கந்தளாய் குள வான் கதவுகள் திறக்கப்படலாம் என எச்சரிக்கை!

## மக்களே அவதானம்

தற்போது பெய்துவரும் அடைமழை காரணமாக கந்தளாய் நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் சனிக்கிழமை காலை 7 மணியளவில் 109,450 ஏக்கர் அடியாகப் பதிவாகியுள்ளது.

தொடர்ந்து மழை பெய்து வரும் சந்தர்ப்பத்தில் வான் கதவுகள் திறக்கப்படலாம் என கந்தளாய் பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. தம்பலகாமம் பிரதேச செயலக பகுதி கந்தளாய் பிரதேச செயலகப் பகுதி மக்களும் மிகவும் அவதானத்துடன் செயற்படுமாறும் தெரிவிக்கப்படுகிறது.

ஆகவே, அவதானத்துடனும் முன்னெச்சரிக்கையாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். (05)

# கஹவத்தையில் தாயை கழுத்தறுத்து கொலை செய்த இளைய மகள் கைது!

கஹவத்தை - வெல்லதுர பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் கடந்த டிசெம்பர் 13 ஆம் திகதி தாய் ஒருவர் கழுத்தறுக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் அவரது இளைய மகள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இவ்வாறு உயிரிழந்தவர் கஹவத்த - வெல்லதுர பிரதேசத்தை சேர்ந்த வினிதா ஜயசுந்தர என்ற 71 வயதுடைய தாயாவார்.

கைதுசெய்யப்பட்டவர் கஹவத்தை பிரதேச செயலகத்தில் பணிபுரியும் 38 வயதுடைய உயிரிழந்தவரின் இளைய மகளாவார். இளைய மகள் தனது தாயின் கழுத்தை அறுத்து வீட்டின் பின்புறத்தில் சடலத்தை எடுத்து சென்று வீசிவிட்டு, வீட்டினுள் சிந்தியிருந்த இரத்தத்தை துடைத்துவிட்டு காலை 11.40 மணியளவில் அலுவலகத்திற்கு சென்று மீண்டும் பிற்பகல் 3.40 மணியளவில் வீடு திரும்பியுள்ளார்.

இதன் பின்னர் அயலவர்களிடம் தனது தாய் தாக்கப்பட்டு உயிரிழந்து சடலமாக கிடப்பதாக கூறி பொலிஸாருக்கு இளைய மகள் தகவல் வழங்கியிருக்கலாமென பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

விசாரணையில் உயிரிழந்த தாயிண் சடலத்திற்கு அருகிலிருந்து இளைய மகளின் கைக்கடிகாரம் மீட்கப்பட்ட நிலை யில் வெளியாள்களால் இந்த கொலை இடம் பெற்றிருக்க முடியாது என சந்தேகித்த பொலிஸார் குறித்த பெண்ணைக் கைது செய்துள்ளனர். இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கஹவத்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# வாழ்நாள் சாதனையாளர் ‘வடமராட்சி தில்லைநாதன்’



- அ.சா. அரியகுமார்
(ஓய்வுநிலை அதிபர்)

யாழ்ப்பாணம், வடமராட்சி - புலோலியைச் சேர்ந்த மூத்த ஊடகவியலாளர் சின்னத்துரை தில்லைநாதனுக்கு இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும், பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இணைந்து கொழும்பில் 'வாழ்நாள் சாதனை யாளர் விருது' வழங்கிக் கௌரவித்திருக்கின்றன. கடந்த 5 தசாப்தங்களுக்கும் மேலாகத் தன் வாழ்வை செய்தியாக்கத்திற்கு அர்ப்பணித்தவர் தில்லைநாதன்.

'வடமராட்சி தில்லைநாதன்' என அழைக்கப்படும் மூத்த ஊடகவியலாளர் சின்னத்துரை தில்லைநாதன் 50 ஆண்டுகளுக்கு மேலாகத் தனது ஊடகப் பணியைச் சிறப்புற ஆற்றி வாசகர்களின் மனங்களில் நிறைந்துள்ளார்.

அக்காலங்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் - இந்திய அரசு போர், தமிழீழ விடுதலைப்புலிகள் - இலங்கை அரசு போர், சுனாமிப் பேரலை அனர்த்தம் ஆகியன இடம்பெற்று மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்த காலம். தனது பிராந்தியத்தில் அக்காலங்களில் நடைபெற்ற



சம்பவங்கள் அனைத்தையும் உடனுக்குடன் தான் பணியாற்றிய ஊடகங்கள் மூலம் வெளிக்கொணர அவர் தவறியதில்லை.

அவர் வெளிக்கொண்டுவந்த பல செய்திகள் சர்வதேசம் வரை பரவின

அதுமட்டுமல்ல மக்கள் எதிர்நோக்கிய அபிவிருத்தி சார்ந்த பிரச்சினைகளையும் வெளிக்கொணர்ந்து அவற்றுக்கு மக்கள் தீர்வைப் பெறுவதற்கும் உதவியுள்ளார்.

தில்லைநாதன், கண்டியிலிருந்து அக்காலத்தில் வெளிவந்த 'செய்தி' வார இதழில் 1968 ஆம் ஆண்டு தனது ஊடகப் பணியை ஆரம்பித்தார். அதே ஆண்டே யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்து கொண்டிருந்த 'ஈழநாடு' பத்திரிகையில் செய்தியாளரானார். பின்னர் 'வீரகேசரி' பத்திரிகையின் பிராந்திய செய்தியாளராக அரை நூற்றாண்டாகத் தனது ஊடகப் பணியைத் தொடருகின்றார்.

அதேவேளை, 'தினபதி', 'சிந்தாமணி', 'தினகரன்', உதயன்', 'சுடர் ஒளி', 'காலைக்கதிர்' ஆகிய பத்திரிகைகளிலும் பிராந்திய செய்தியாளராகத் தில்லைநாதனின் ஊடகப் பணி தொடர்ந்தது.

பெரும்பாலான தமிழ்ப் பத்திரிகைகளில் தில்லைநாதன் பிராந்திய செய்தியாளராகப் பணியாற்றியுள்ளார் - பணியாற்றுகின்றார். அவரின் உன்னத ஊடகப் பணிக்கு இது சிறந்த சான்றாகும்.

மாணவனாக இருந்தபோது வாசிப்பின் மீது இருந்த ஆர்வமே ஊடகத்துறைக்கு அவரை இழுத்துச்சென்றது. தான் மட்டுமல்ல இளம் வயதினரையும் இத்துறையில் ஆர்வம் காட்டச் செய்து, அவர்களைப் பத்திரிகைகளில் செய்தியாளர்களாக இணைவதற்கும் வழிகாட்டியவர். அவர்கள் சிறந்த ஊடகவியலாளர்களாகத் திகழ்ந்து பல பத்திரிகைகளில் பணியாற்றினார்கள் - பணியாற்றுகின்றார்கள்.

1970 - 1977 காலப் பகுதியில் வடமராட்சியில் பல கிராமங்கள் கைவிடப்பட்டு அபிவிருத்தியில் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்பட்டன. கல்வி, வீதி, போக்குவரத்து, சுகாதாரப் பிரச்சினைகள் நிறைந்த பகுதியாகவே வடமராட்சி கிழக்குப் பிரதேசம் காணப்பட்டது. அப்பிரதேசத்தில் 14 பாடசாலைகள் தரம் 5 அல்லது தரம் 6 வரை உள்ள பாடசாலைகளாகவே காணப்பட்டன. மூன்று பாடசாலைகள் மட்டுமே ஜி.சீ.ஈ. சாதாரண தரம் வரை வகுப்புக்கள் உள்ளதாக இருந்தன. இதனால் அப்பிரதேசத்தில் ஏராளமான மாணவர்கள் தமது ஆரம்ப வகுப்புகளுடன் தமது கல்வியை நிறுத்தி இடைவிலகிச் செல்கின்ற நிலை காணப்பட்டது. இந்த அவலநிலை பற்றிய செய்திகளை எல்லாம் அப்பிரதேச மக்களின் வேண்டுகோளுக்கிணங்க பத்திரிகைகளில் வெளியிட்டு அப்பிரச்சினைக்குப் படிப்படியாகத் தீர்வு பெற உதவினார். அரச பஸ் சேவை மட்டும் அப்பிரதேசத்தில் இடம்பெற்றது. அச்சேவையில் நடைபெறும் தவறுகளையும் அவர் பத்திரிகைகள் மூலம் வெளிக்கொணரத் தவறியதில்லை.

முன்னாள் பருத்தித்துறை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைரத்தினம் அப்பிரதேசத்துக்குச் செல்கின்றபோது அவருடன் தானும் சென்று அப்பிரதேச நிலைமைகளைக் கண்ணுற்று அதனைப் பத்திரிகைகள் மூலம் வெளிக்கொணரத் தவறியதில்லை.

1987 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இந்திய இராணுவத்தினருக்கும் இடையில் போர் மூண்டபோது வடமராட்சியில் இடம்பெற்ற பல்வேறு தாக்குதல் சம்பவங்களைத் தான் சார்ந்திருந்த பத்திரிகைகள் மூலம் வெளியே கொண்டு வந்தார். அக்காலத்தில் இடம்பெற்ற வல்வைப் படுகொலை மற்றும் பொதுமக்கள் மீதான தாக்குதல் போன்ற சம்பவங்களைச் செய்தியாக வாசகர்களுக்கு அறியத்தந்தார்.

இலங்கை இராணுவத்தால் 1987 ஆம் ஆண்டில் வடமராட்சியில் மேற்கொள்ளப்பட்ட 'ஒப்பரேசன் லிபரேசன்' தாக்குதலின்போது மக்களின் இடம்பெயர்வு அவலங்கள் சம்பந்தமான செய்திகளையும் பத்திரிகைகள் மூலம் வெளிக்கொணரச் செய்தார்.

அதன்பின்னர் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை இராணுவத்துக்கும் இடையே இடம்பெற்ற மோதலின்போதும் வடமராட்சியில் இடம்பெற்ற சம்பவங்களையும் செய்தியாக வெளிக்கொணர அவர் தவறவில்லை.

1991 ஆம் ஆண்டில் தமிழீழ விடுதலைப்புலிகளால் ஆனையிறவுப் படை முகம் மீது மேற்கொள்ளப்பட்ட ஆகாய கடல் வெளித் தாக்குதல், வெற்றிலைக்கேணியில் இராணுவம் தரையிறக்கம் தொடர்பான செய்திகளை மோதல் நடைபெற்ற காலப் பகுதியில் தினமும் பத்திரிகைகளில் செய்தியாக வெளிவர உழைத்தார்.

2004 ஆம் ஆண்டு இலங்கையில் சுனாமிப் பேரவலம் ஏற்பட்டபோது வடமராட்சியில் தொண்டமானாறு தொடக்கம் கட்டைக்காடு வரையான கரையோரக் கிராமங்கள் கடல் அலையால் அடித்துச் செல்லப்பட்டதையும், ஆயிரக்கணக்கான மக்கள் கடல் அலையால் காவுகொள்ளப்பட்டதையும், காயமடைந்த சம்பவங்களையும் இவர் செய்தியாக வெளிக்கொண்டு வந்தார்.

இவர் நீதிமன்றச் செய்திகளையும் பத்திரிகைகளில் தொடராக வாசகர் அறிய வெளிக்கொணர்ந்தார். வடக்கில் இடம்பெற்ற கொலை வழக்குகளை நீதிமன்றம் சென்று சேகரித்து வழங்கி வந்தார். பருத்தித்துறையில் மாணவி ஒருவர் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டு ஆனைவிழுந்தான் சுடலைக்கு அண்மையில் வீசப்பட்ட கமலம் கொலை வழக்கு, செம்மணி கிருஷாந்தி கொலை வழக்கு, பருத்தித்துறை திக்கமுனை மைதானத்தில் இடம்பெற்ற 'காணிவேல்' நிகழ்வின்போது பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையே ஏற்பட்ட தாக்குதல் பற்றிய வழக்கு ஆகியவற்றைப் பத்திரிகைகளில் தொடராக வர உழைத்தார். அத்துடன் வடமராட்சி கிழக்கு - மணற்காட்டில் குட்டிமணி, ஜெகன், தங்கத்துரை ஆகியோர் கைது செய்யப்பட்ட செய்தியையும் முதன்முதலாகப் பத்திரிகைகளில் வெளிக்கொணர்ந்தார்.

இவர் செய்தியாளராகக் கடமையாற்றிய காலத்தில் பெரும் பகுதி மிக இக்கட்டான காலப் பகுதியாகும். ஊடகங்களும், ஊடகவியலாளர்களும் மிகப் பெரிய சவால்களை எதிர்நோக்கியிருந்த காலம். அக்காலப் பகுதியில் துணிவுடனும் பக்கச்சார்பின்றியும் செய்திகள் வெளிவர உழைத்தார். தொழில்நுட்ப வசதிகள் எதுவுமற்ற காலப் பகுதியில் செய்திகளைப் பத்திரிகை நிறுவனங்களுக்கு நேரில் கையளித்தும், தபால் மூலம் அனுப்பியும் பத்திரிகைகளில் அவை வெளிவர நடவடிக்கை எடுத்தார்.

ஊடகத்துறையில் 50 ஆண்டுகளுக்கு மேலாகத் தனது பணியைத் தொடரும் தில்லைநாதனுக்கு அவரது 73 ஆவது அகவையில் 'வாழ்நாள் சாதனையாளர் விருது' வழங்குவது பொருத்தமானதாக அமைந்துள்ளதுடன் அவரது பணியும் பாராட்டுக்குரியது.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.12.2023இல் வெளியிடப்பெற்றது.